
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

Translated from
BS#899 Mar-April 2017

பொருளடக்கம்

தேவ சமாதானம் ............. 2

கடைசியாக சகோதரரே... ............ 10

BS Tamil Version - 40

2017

# தேவ சமாதானம்


***The Peace of God***

**(பிலி. 4:7)**

சமாதானம் என்பது அமைதியான, கலக்கமற்ற, குழப்பம் அல்லது கலக்கத்திலிருந்து விடுதலை பெற்ற சாந்தமான, ஓய்வான நிலை என்று விளக்கப்படுகிறது. நம்முடைய பாட வசனம் அப்படிப்பட்ட ஒரு மனநிலை தேவனுடையது என்பதை உறுதிப்படுத்துகிறது. அவர் சாந்தமும், அமைதியும், குழப்ப மடையாததும், ஒருபோதும் கலக்கமடையாததும், அவருடைய மிகப் பரந்த ராஜ்யபாரத்தினால் எந்த கவலையும் தடுமாற்றமும், சோர்வடையாத மனமும் உடையவராயிருக்கிறார். ஆயினும் தேவனுடைய இந்த பூரண சமாதானம் வேத வசனங்கள் காட்டுகிறபடி அவருடைய மிகப் பரந்த ராஜ்யத்தில் எந்த அமைதி குலைவும் இல்லாததால் அல்ல; வேதனை அல்லது மகிழ்ச்சியை விருப்பு வெறுப்பின்றி சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையினாலும் அல்ல; ஆனால் அதற்கு மாறாக அவருடைய மகிமையான குணப்பண்புகளின் பூரணமான சமநிலை அவருடைய சூழ்நிலைக்கு அவரை எஜமானராக, அண்ட சராசரத்திற்கும் மேலான ராஜாதி ராஜாவாக ஆக்குகிறது.

நாம் சந்தோஷமும், நம்பிக்கையுமான ஆவியை உடையவர்களாக அவருடைய வாக்குத்தத்தத்துக்கு இசைவாக நம்முடைய விண்ணப்பத்தை ஏறெடுத்து, அவருடைய பரிபாலனம் கொடுக்கிற எதையும், நன்றியறிதலுடனும், ஸ்தோத்திரத்துடனும் ஏற்றுக்கொள்ளுகிறவர்களாகஇருப்போமா னால், அப்போது நாம் தேவ சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த சமாதானமானது, ஒருவனுடைய ஆத்துமா தேவனுடன் தனிப்பட்ட முறையில் நெருங்கிய ஐக்கியத்தை கொண்டிருப்பதின் நேரடி பலனாக இருக்கிறது. இந்த சமாதானத்துடன் தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகள், தங்கள் கண்ணீரின் ஊடாக, தங்கள் மகிமையான நம்பிக்கை களின் நிறைவேறுதலுக்காக மகிழ்ச்சியான எதிர்பார்ப்போடு மேல் நோக்கிப்பார்க்க முடியும். இந்த தேவசமாதானம், கர்த்தரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற எல்லோர் மீதும் பரிசுத்தமான ஒரு செல்வாக்கு அவர்கள் மீதாக செல்லும்படி ஆளுகை செய்கிறது. பிரதிஷ்டை செய்திருக்கிறவர்கள் உலகத்தாருக்கு பொதுவாக உள்ள கவலைகளிலிருந்து ஓர் இளைப்பாறுதலை பெற்றுக் கொள்ள முடியும். கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது கவலைப்படுவதை நீக்குவதால், அது குறிப்பிட்ட அளவு ஆரோக்கியத்தைக் கொண்டு வருகிறது.

ஆயினும், பிரதிஷ்டை செய்தவர்களின் இருதயங்களில் ஆளுகை செய்கிற இந்த சமாதானம் கொஞ்ச நேரம் மட்டும் தங்கிச் செல்லுகிற விருந்தாளியல்ல. நாம் அதனை எஜமானரிடமிருந்து வருகிற ஒரு வரமாக அதனைப் பேணி





"அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக் குள்ளாகக் காத்துக்கொள்ளும்."-பிலி. 4:7.

வளர்த்துக் கொள்ள வேண்டும், "**என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்.**" தேவனுடைய சமாதானம், தயவு மற்றும் மகிமையான நம்பிக்கைகளை அனுபவித்து மகிழ்வதற்கு ஒரு விலை கொடுக்க வேண்டும்! ஆம். கர்த்தருடைய ஜனங்கள் எல்லோரும் இதை அறிவித்து, கர்த்தருடைய ஊழியத்தில் மென்மேலும் முன்னேற்றமடைவதைக் காட்டுபவர்களாயிருக்க வேண்டும். "**துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.**" (ஏசா. 48:22); "**துன்மார்க்கரோ, கொந்தளிக்கும் கடலைப் போலிருக்கிறார்கள், அது அமர்ந்திருக்கக்கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும், அழுக்கையும் கரையில் ஒதுக்கு கிறது**" (ஏசா. 57:20) என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். துன்மார்க்கருக்கு தேவ சமாதானம் இல்லை! இயேசுவை உண்மையாகப் பின்பற்றுகிற கிறிஸ்தவர்கள், அவர்கள் தெரிந்து கொண்ட நடைமுறையினால் அவர்களுடைய வாழ்க்கையைத் துயரமுள்ளதாக்கிக் கொள்கிற தாக உலகத்தார் எண்ணுகின்றனர். ஆனால், இந்த காரியத்தில் உலகத்தார் மிகுதியான தவறு செய்கிறவர்களாக இருக்கிறார்கள். மாறாக, நாம் மிகவும் களிகூர்ந்து மகிழ்ந்திருக்கிறோம். ஏனெனில் நாம் நல்லதோர் காலத்தை உடையவர்களாக இருக்கிறோம். நமக்கு பாடுகள் இருந்தாலும், ஒவ்வொரு வழியிலும் அதிகமான நன்மையைப் பெற்றிருக்கிறோம்;


**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Leon Snyder. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

ஏனெனில் இன்னும் கொஞ்ச காலத்தில், நம்முடைய பரீட்சைகள் பாடுகள் எல்லாமே முடிந்துவிடும்; சமாதானம், பூரண சமாதானமாயிருக்கும் என்று நாம் அறிந்திருக்கிறோம்.

குழப்பம் மற்றும் யுத்தத்தின் புகையின் மத்தியிலும் புகழ்பெற்ற படைத்தலைவர்களான கிராண்ட் அல்லது நெப்போலியன் போன்றவர்களும், அல்லது நெருக்கடியான சமயங்கள் மற்றும் இடங்களில் திறமையுள்ள மருத்துவர்கள் அல்லது மற்றவர்களும் – மன அமைதியும் சாந்தமும் தன்னடக்க அமைதியுடனுமிருந்ததைக் குறித்து நாம் வியந்து பாராட்டியிருக்கிறோமா? இவைகள் தேவனுடைய மனதில் ஆளுகை செய்கிற தன்னடக்க அமைதி மற்றும் தன்னம்பிக்கை பற்றிய தெளிவற்ற விளக்கங்கள் மட்டுமே. அவர் ஒருபோதும் குழப்பமடைவதோ, தடுமாற்றமடைவதோ, கலக்கமடைவதோ, உணர்ச்சிவசப்படுவதோ இல்லை அல்லது கவலையில் மூழ்குவதோ அல்லது அவருடைய திட்டங்கள் தவறாகப் போய் விடுமென்றோ அல்லது அவரது நோக்கங்கள் தோல்வியடைந்து விடுமென்றோ சிறிதளவேனும் பயப்படுவதும் இல்லை. ஏனெனில் எல்லா வல்லமையும் ஞானமும் அவருக்குள் இருக்கிறது. அவருடைய மாபெரும் அறிவாற்றலின் செயல் எல்லை முடிவுவரை செல்லத்தக்கது. எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவன், எல்லாவற்றையும் தாங்குகிற திறனுடைய–வராயுமிருக்கிறார். எதிர்பாராத இடையூறு அல்லது ஒழுங்கின்மை பற்றிய சந்தேகத்துக்கு இடமில்லாமல், இயற்கையான முழு பிரபஞ்சமும் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுகிறது. மேலும் அதே வல்லமை எதிர்கால நித்தியம் முழுவதும், அதை நிலைத்திருக்கச் செய்வதற்காக வாக்குறுதியளிக்கப்பட்டுள்ளது. அவருக்கு சொந்தமானதும், அளவற்றதும், இயல்பாய் அமைந்துள்ள வளங்களாகிய வல்லமை மற்றும் ஞானத்திலிருந்து தேவனுடைய சமாதானம் உருவாகிறது. ஆனால் இந்த உற்பத்தி ஸ்தானத்திலிருந்து மட்டுமே தேவ சமாதானம் வரவில்லை; ஏனெனில் சமாதானம் என்பது நிச்சயமாக இயல்பாய் அமைந்துள்ள நற்குணத்தோடு சேர்ந்து வருகிறதாயிருக்கிறது. தேவனே ஒவ்வொரு நற்குணத்திற்கும், ஒவ்வொரு கிருபைக்கும் முழு உருவமாக இருக்கிறார்; அதன் காரணமாக, அவரிடம் ஆசீர்வாதமான திருப்தியும், மனசாட்சியின்படியான சமாதானமும், சன்மார்க்க பூரணமும், அதைப் போலவே இயல்பாக அமைந்துள்ள ஞானமும், வல்லமையும் உள்ளவராயிருக்கிறார்.



தேவனுடையசாயலில் சிருஷ்டிக்கப்பட்டான்

இந்த தேவ சமாதானம் அதிகமான ஒழுங்கின்மை மற்றும் குழப்பத்துடன் சேர்ந்தே இருந்து வருவதை நாம் காண்கிறோம். ஒரு தகப்பன் என்ற முறையில் அவர் புத்தியுக்தியுள்ள தம்முடைய சிருஷ்டிகள் எல்லாரிடத்திலும், அவர் ஒரு தகப்பனுடைய அன்பை வழங்குகிறார் என்பதை நமக்குக் காண்பிக்கிறார். "**பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள** (தேவனுடைய) **முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணர்**" – மேலும் அவை யாவும், அவருடைய "***சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப் பட்டவைகளுமாயிருக்கிறது***" (எபே. 3:14; வெளி. 4:11). புத்திரர்கள் என்ற முறையில் அவர் அவர்களுடன் கூட்டுறவும் ஐக்கியமாயிருக்கவும், பிதா என்ற முறையில் அவர்கள் அவருடனும் பரஸ்பர உறவும் ஐக்கியமும் கொள்ளவும் சிருஷ்டிகரும், சிருஷ்டியும் மகிழ்ச்சியும், சந்தோஷமும், பிரியமும் கண்டடைவதற்காக அவர் தம்முடைய சாயலில் அவர்களை அதே மனம் மற்றும் சன்மார்க்க குணப்பண்புகளுடன் சிருஷ்டித்தார். நாம் வெளி. 4:11–ல், "**உம்முடைய *சித்தத்தினாலே* அவைகள் உண்டாயிருக்கிறவைகளும், *சிருஷ்டிக்கப்பட்டவை களுமாயிருக்கிறது***" என்ற வார்த்தைகளை வாசிக்கும்போது, யேகோவா தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கும் தம்முடைய மகிமையான இயல்பின் குணப்பண்புகளைப் பயன்படுத்துவதற்கும் விருப்பமுள்ளவராயிருந்தார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியவர் களாயிருக்கிறோம். தேவன் தம்முடைய புத்தியுக்தியுள்ள சிருஷ்டிகளுக்கு குணாதிசயத்தின் பகுதியான இந்தப் பண்பை (நன்றியறிதலை) வழங்கியிருந்தார், எனவே அவருடைய நற்பண்புகளுக்கு நாம் பதில் செய்யக்கூடியவர்களாயிருக்கிறோம். ஏசா. 43:7–ல்: "**நான் என் மகிமைக்கென்று அவனை சிருஷ்டித்தேன்!**" என்று சொல்லப்பட்டுள்ளது.




தேவனுடைய இந்த சாயல் எல்லாரிலும், ஒரே மாதிரியான மனதின் சிறப்பு அம்சங்களை மட்டுமல்லாமல் குணாம்சத்தை உருவாக்குவதில் அதைத் தாராளமாக பயிற்சி செய்வதையும்கூட உள்ளடக்கியிருக்கிறது. குணாம்சத்தை உருவாக்கிக்கொள்ள முடியாத ஒரு சிருஷ்டி தேவனுடைய சாயலில் இருக்க முடியாது. குணாம்சத்தை வளர்த்துக் கொள்ளும் நோக்கத்துக்காக, நன்மையும், தீமையும் அவனுக்கு முன்பாக வைக்கப்பட வேண்டும். சரியானதும், தவறானதுமான செயல்பாடுகளின் கோட்பாடுகள் பகுத்தறியப்பட்டு, ஒவ்வொரு தனிநபரும், அந்த காரியத்தில் தனக்குப் பிரியமானதைத் தெரிந்து கொள்ள சுதந்திரமாக விடப்பட வேண்டும். நீதியானதை (நன்மையானதை) சுதந்திரமாக தேர்ந்தெடுப்பதின் பலனாக உருவாகிற நற்குணாம்சத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் என்பது உணர்ந்து கொள்ளப்படக் கூடும்.

புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட கள்ளங்கபடமற்ற சிருஷ்டிகளிடம் தேவனுடைய அன்பானது கள்ளங்கபடமற்ற குழந்தைகளிடம் பூலோக பெற்றோருக்கு இருக்கும் அன்புடன் ஒத்ததாக இருப்பினும் அதைக் காட்டிலும் அதிக பலமுள்ளதாயிருக்கிறது. அந்த அன்பான கவனமும், அக்கறையும், அந்த சிருஷ்டியானது வயதில் முன்னேறிச் செல்லச் செல்ல குளிர்ந்து போவதில்லை, ஆனால் நீதியின் கோட்பாடுகளிலும், கனிகளிலும் வளர்ச்சியடைவதை ஆவலுடன் கவனித்து வருகிறார். பூமிக்குரிய பெற்றோரைப் போல, தேவனுடைய சுயாதீனமான புத்தியுக்தியுள்ள சிருஷ்டிகள் சரியான அல்லது தவறான பாதையைத் தேர்ந்தெடுப்பதைப் பொறுத்து அவர் சந்தோஷம் அல்லது வேதனையை அனுபவத்தில் உணர்கிறார் என்பதும் வெளிப்படுத்தப்படுகிறது. அவருடைய தகப்பனுக்குரிய

தன்மை என்ற விஷயத்திலிருந்து நிதானித்துப் பார்ப்பதனால் மட்டுமல்லாமல், கூடுதலாக அவருக்கு பிரியமற்றதும், அருவருப்பானதும், வெறுப்பானதும், அவருக்கு எந்த சந்தோஷத்தையும் கொடுக்காதவைகளான சில காரியங்களைப் பற்றி பேசுகிற அனைத்து வேத வாக்கியங்களாலும் நாம் முழுமையாக இதைக் குறித்து உறுதியளிக்கப்பட்டிருக்கிறோம். மற்ற வேத வாக்கியங்கள் நீதியின் கொள்கைகளிலும் அவைகளுக்கு கீழ்ப்படிகிறவர்கள் பேரிலும் அவருடைய சந்தோஷம், அன்பு, மகிழ்ச்சி மற்றும் பிரியம் போன்றவை பற்றியும் பேசுகின்றன.

தேவனுடைய மனதை வெளிப்படையாகக் காட்டும் இவைகள், தெய்வீகத் தன்மையின் உணர்ச்சிவசப்படக்கூடிய இயல்பைத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன, அந்த உண்மையைப் பற்றி நாம் நம்முடைய உணர்ச்சி வசப்படும் சுபாவத்தை உணர்ந்து கொள்வதிலிருந்தும்கூட நாம் நிதானிக்கலாம், ஏனெனில் மனிதன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான். அருமை நண்பர்களே, தேவன் விருப்பு வெறுப்பற்றவரும் இன்ப துன்ப உணர்ச்சிகளை உணர முடியாத ஒரு தேவனாக இருக்கவில்லை; ஆனால் இன்பம் அல்லது துன்பம் எதுவாயினும் எல்லா சூழ்நிலைகளின் கீழும் அவருடைய குணப்பண்புகளின் பூரண உறுதியான நிலை, சமாதானத்தின் சமநிலையைக் காத்துக் கொள்கிறது.

தேவனுடைய உடைக்க முடியாத சமாதானம் என்ற சிந்தையோடுகூட, தேவனுடைய அதிசயமான சமாதானம் தொடர்ந்தேர்ச்சியாக காக்கப்பட்டு வருகிறதான சூழ்நிலை களையும் நாம் கருத்தில் கொள்வோமாக. ஆழமும் உறுதியுமாக நிறுவப்பட்டுள்ள தேவனுடைய திட்டமானது அவருடைய சகல சிருஷ்டிப்பின் கிரியைகளில் அதன் நிறைவேறுதலுக்கு நீண்ட யுகங்கள் அவசியப்படுகிறது. யுகங்களின் காட்சிகளின் ஊடாக அவர் தமது நோக்கத்தில், நீதியில் நிலைநிறுத்தப்பட்ட தமது சொந்த சாயலில் ஒரு புத்தியுக்தியுள்ள சிருஷ்டியின் மகிமையையும், நித்திய ஜீவனாகிய அவருடைய வெகுமதிக்கு அவன் தகுதியுள்ளவனாயிருப்பதையும் அவர் கண்டார். அங்கே அவர் சிருஷ்டிகருக்கும், சிருஷ்டிக்கும் இடையேயான பரஸ்பர சந்தோஷத்தையும் கண்டார். அத்துடன் சமாதானமான பொறுமையுடன், மகிமையான நிறைவேறுதலுக்காக காத்திருக்கும்படி அவர் தீர்மானித்திருக்கிறார்.

திட்டமானது முன்னேற்றமடைந்து, காலம் உருண்டு செல்லச்செல்ல சன்மார்க்க சுயாதீனமான அதிகாரம் அவருடைய சிருஷ்டிகளில் சிலரால் தவறாகப் பயன்படுத்தப்பட்டு, தீமையான குணாம்சங்களை வளர்த்துக்கொள்ள அவர்களுக்கு வழிவகுத்தது. இந்த தவறான செயல்களினால் அவருடைய குடும்பத்திற்குள் - "**பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள** (தேவனுடைய) **முழு குடும்பத்துக்குள்**" முரண்பாடுகள் பிரவேசித்தது - அவருடைய சிருஷ்டிகள் எல்லாவற்றிலும் தேவ தூதர்கள் மற்றும் மனுஷர்கள் இடையே பிரிவினை ஏற்பட்டது. சிலர் நீதியைப் பற்றிக் கொண்டனர், சிலர் தீமை செய்வதைத் தெரிந்து கொண்டனர். ஆனால் அப்படிப்பட்ட தற்செயல் நிகழ்வு வெகு தொலைவில் நிறைவேறப் போகிறதான திட்டத்தின் மகிமையான பலன் முன்கூட்டியே காணப்பட்ட அத்தியாவசியங் களில் ஒன்றாகயிருந்தது. தெய்வீக நிதானிப்பின்படி அது அனைத்து உபத்திரவங்கள் மற்றும் நஷ்டங்களின் மதிப்புக்கு ஈடாயிருந்ததை யேகோவா தேவன் முன்னதாகவே அறிந்திருந்தார்.

குடும்பத்திலுள்ள முரண்பாடுகள் எவ்வளவு பயங்கரமான காரியமாயிருக்கின்றன! எப்படி ஓர் கெட்டழிக்கிற (ஊதாரித்தன மான) மகன் அல்லது தன்னிச்சையாக நடக்கும் மகள் அடிக்கடி மனுஷீக பெற்றோரின் நரைமயிர்களை துயரத்துடன் கல்லறை யில் இறங்கும்படி செய்துவிடுகிறார்கள்! ஆ, அப்படிப்பட்ட துயரத்தைப் பற்றி பரமபிதாவானவர் ஓரளவுக்கு அறிந்திருக் கிறார், எப்படியெனில் அவர் தம்முடைய புத்திரர்களுள் ஒருவனும் (ஏசா. 14:12) ஒளியின் தூதனுமான சாத்தான், மின்னலைப் போல வானத்திலிருந்து விழுவதைக் கண்டார். (லூக். 10:18). ஆறாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அந்த குமாரன் வெளிப்படையாக அகந்தையுடன், தேவனுக்கு விரோதமாக கலகம் செய்கிறவனாக, மிகவும் சுறுசுறுப்பாகவும், வஞ்சகமாகவும், மென்மேலும் கிளர்ச்சியையும், துன்-மார்க்கத்தையும் தூண்டுவதிலும் ஈடுபட்டு வருகிறான். அநேக தேவ தூதர்கள் தங்கள் ஆதி மேன்மையைக் காத்துக் கொள்ளாமல் விட்டுவிட்டதையும் சாத்தானுக்கு தோழர் களானதையும் கண்டார். (யூதா 6). கூடவே அவர் முழு மனுக்குலமும் பாவத்தில் விழுந்ததையும் கண்டார். பின்பு தேவன், பிரியமற்றதாயினும் கண்டித்து ஒழுங்குபடுத்தும் கடமைகளை நடைமுறைப்படுத்துவது அவசியம் என்று கண்டார். அவருடைய நீதியின்படி துரோகம் செய்த குமாரர்களை கைவிட்டு அவர்களை விரோதிகளாக கருதி நடத்த வேண்டும். இருந்தபோதிலும் அதே சமயத்தில் அவருடைய தகப்பனுக்குரிய அன்பு, வஞ்சிக்கப்பட்டு விழுந்து போனவர்களை ஆசீர்வதிக்க ஆயத்தம் செய்து வந்த போதிலும்கூட, மீட்பின் நோக்கங்கள், மனந்திரும்புகிறவர்களை அவருடைய தயவுக்கு மீண்டும் கொண்டுவரச் செய்யும்போது, அன்பானது திரையால் மூடப்பட்டு, அதே சமயம் கண்டிப்பும், இரக்கமற்ற நீதி மட்டுமே வெளிப்படுத்தப்பட முடிந்தது. இது இனிமையான கடமை யாகவும் இல்லை, மற்றும் பாவியின் மனப்பான்மை அவருக்குப் பிரியமாகவும் இருக்கவில்லை.

ஆம், நீதியே முதலாவது, பின்புதான் அன்பு! சில சமயங்களில் கிறிஸ்தவ ஜனங்கள் வேதாகமத்தில் அன்பின் உபதேசத்தைக் காண்கிறார்கள், அன்புக்கு முன்பாக ஒரு பாடம் அங்கே இருப்பதை மறந்து விடுகிறார்கள். அந்த அடிப்படையான பாடம் நீதியைப் (நியாயம்) பற்றிய பாடமாயிருக்கிறது. இந்த நீதியின் அடிப்படை விதிகள் அறிந்து கொள்ளப்பட்டு, பின்பற்றப்படுமானால், மனுஷர் இக்காலத்தில் ஒருவரையொருவர் சுட்டுக்கொண்டிருக்கிறவர்களாக இருக்க மாட்டார்கள்.



தேவனுடைய அன்பு

யோவா. 3:16 "**தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.**" ஓ, ஆயினும் இது ஒரு அற்புதமான கிருபை! அவருடைய அன்பு பெருகுகிறது. அவர்கள் பாவிகளாக இருக்கும்போதே அவர்களுக்காக மரிக்கும்படி தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்று எழுதியிருக்கிறது. நன்மையான எந்த ஈவும் பூரணமான

எந்த வரமும் தேவனிடத்திலிருந்து வருகிறதாயிருந்தபோதிலும், அவருடைய தயவுகள் அசட்டை செய்யப்பட்டன. அவருடைய அன்பு வெறுத்து தள்ளப்பட்டது; அவருடைய நீதியான அதிகாரத்துக்கு எதிராக சதி செய்யப்பட்டு, எதிர்க்கப்பட்டது; அவருடைய குணாம்சம் அவதூறு செய்யப்பட்டு தவறாக எடுத்துக்காட்டப்பட்டு, வெறுக்கப்படத்தக்கதாகவும், அநீதியானதாகவும், பயனற்றதாகவும்கூட தோன்றும்படி செய்யப்பட்டது. இருந்தபோதிலும், ஆறாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அவர் தமக்கு எதிராக பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை சகித்துக் கொண்டிருக்கிறார். அதன் ஊடாகவும் முழுமையான தேவ சமாதானம் நீடித்திருக்கிறது.

தெய்வீக அன்பாகிய இந்த வரமானது நம்முடைய பரலோக பிதாவுக்கு அவருடைய மகா மேன்மையும், அதிசயமுமான திட்டத்திற்காக கொடுக்கப்பட வேண்டிய கிரயத்துக்கு மற்றொரு அடையாளமாக இருக்கிறது. தம்முடைய குடும்பத்தின் பெரும்பாலானவர்கள் பாவத்திற்குள்ளாக விழுந்துபோவதை மட்டும் அவர் பார்க்கவில்லை, ஆனால் அவர்களை மீட்டெடுப்பதற்கு விலையாக தம்முடைய இருதயத்திற்கு மிக அருமையான பொக்கிஷத்தை தியாக பலியாகவும், மிகவும் பிரியமான ஒருவரை மிகவும் கேவலமான இழிவுப்படுத்துதலுக்கும், அவமானம், பாடுகள் மற்றும் மரணத்திற்கும் உட்படுத்த வேண்டியதாயிற்று. மீண்டும், யேகோவாவின் அன்பைக் காட்டும் இந்த வெளிப்பாட்டின் விலைக்கிரயத்தைப் புரிந்து கொள்வதில் பெற்றோரின் அன்பைக் காட்டும் உதாரணம் நமக்கு உதவி செய்கிறது. எப்படிப்பட்ட இளகிய மனதோடும், ஆழ்ந்த விருப்பத்தோடும் அன்பின் உணர்ச்சிப் பெருக்கினால் தமக்குப் பிரியமாயிருந்த தமக்கன்பான குமாரனை இந்த பலித்தியாகமாக தேவன் செய்திருக்க வேண்டும்! லோகாஸாக சிருஷ்டிக்கப்பட்ட நாள் முதற்கொண்டே வெளியாக்கப்பட்ட எல்லா குணாம்ச கிருபைகளுடன் இன்னும் கூடுதலாக இப்போது தேவ சித்தத்திற்கு முழுமையாக கீழ்ப்படிதல் என்ற கிருபையும் சேர்க்கப்பட்டது. இருந்தாலும் அவருக்கு கொடுக்கப்பட்ட பாதையானது தாழ்மையும், வேதனை நிறைந்ததுமாக Öò Í >m. "**அவர் குமாரனாயிருந்தும், பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்.**" (எபி. 5:8).

ஆ, துயரமான உணர்வு சிறிதும் இல்லாமல் பிதாவானவர் அவரை இப்படியாக அந்த இரக்கத்தின் நோக்கத்தை நிறைவேற்ற அனுமதித்தாரா? அவருடைய அன்பான குமாரனின் இருதயத்தை மரணத்தின் அம்புகள் துளைத்தபோது, ஒரு தந்தையின் அன்பின் கடும் வேதனையை அவர் உணரவில்லையா? நம்முடைய அருமை கர்த்தர், "**என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது**" என்று சொன்னபோதும், மீண்டும், "**என் பிதாவே, இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது**" என்று சொன்னபோதும் இது நித்தியமானவரின் இருதயத்தில் எந்த அனுதாப உணர்ச்சிகளையும் தூண்டவில்லையா? ஆம், நிச்சயமாக; பிதாவின் மாயமற்ற அன்பு கர்த்தருடைய துயரத்தை அனுதாபத்துடன் பகிர்ந்து கொண்டது. (மத். 26:38,39).

**இன்று**

**ஒரு அந்நியனுக்கு உன் புன்சிரிப்பில்**
**ஒன்றைக் கொடு அது ஒன்றுதான் நாள்முழுவதும் அவன்**
**காணும் சூரிய வெளிச்சமாகயிருக்கலாம்.**

தேவனுடைய வார்த்தையில் போதிக்கப்பட்ட கோட்பாடாகிய, அதாவது மெய்யான அன்பு, அழுகிறவர்களுடனே அழுகிறது, களிகூருகிறவர்களுடனே களிகூருகிறது என்பதே தெய்வீக குணாம்சத்திலும் மெய்ப்பிக்கப்படுகிறது. சாவாமையுள்ள யேகோவா தேவன் நமக்காக மரிக்க முடியாது. ஏனெனில் அவருடைய தெய்வீக சுபாவம் மரணத்தினால் சேதப்படுத்த முடியாதது. மேலும் அவர் மரிக்க முடிந்திருந்தாலும், அவரை மரணத்திலிருந்து எழுப்புவதற்கு மேலான வல்லமை எதுவும் இல்லவும் இல்லை. சிருஷ்டிகள் யாவும் ஆளுகிறவர் இல்லாமல் என்றென்றைக்கும் கைவிடப்பட்டிருப்பார்கள். அதன் பலனாக பேரழிவும், நாசமும் ஏற்பட்டிருக்கும், ஆனால் தேவன் தம்முடைய அன்பான தகப்பனுக்குரிய இயல்பான தன்மையில், தம்முடைய இருதயத்திற்கு மிகவும் அன்பான பொக்கிஷத்தை மிகப்பெரிய விலை கொடுத்து பலித்தியாகம் செய்ய முடிந்தது, அப்படியே செய்தார்; மேலும் வஞ்சிக்கப்பட்டு விழுந்துபோன தம்முடைய சிருஷ்டிகளிடம் அவர் மிகப்பெரிய அன்பை வெளிப்படுத்தினார். (1 யோவா. 4:9). இந்த பலித்தியாகம் அவருக்கு விலையற்றதாக இருந்திருந்தால், இது போன்றதொரு சூழ்நிலையிலும்கூட எந்த வேதனையான உணர்ச்சியையும் அவருடைய மனதிற்கு உணர்ந்து கொள்ள முடியாததாக இருந்திருக்குமானால், பின்பு அவருடைய குமாரனை ஈவாகக் கொடுத்தது அவருடைய அன்பை வெளிப்படுத்துவதாக இருந்திருக்காது, ஏனெனில் எது விலையற்றதோ, அது எதையும் வெளிப்படுத்துவதில்லை.

நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்கு, பிதாவை மகிமைப்படுத்துவதும், மனிதர்களிடையே அவருடைய மகிமையான குணாம்சத்தை பற்றி தவறாக புரிந்து கொண்டவற்றை சீர்படுத்துவதும் – மனிதர்களுக்கு அவருடைய நற்குணம், இரக்க மனப்பான்மை, அன்பு மற்றும் கிருபையைக் காட்டி, அவர்கள் இன்னும் பாவிகளாயிருந்தாலும்கூட அவர்களைத் தேடி வந்து அவர்களுடைய நித்திய இரட்சிப்புக்கு திட்டமிட்டு அவர்களை அதிகமாக நேசித்த இரக்கமுள்ள தேவனை நேசிக்க வழிநடத்துவதே அவருடைய ஜீவியத்தின் ஒரே பெரு முயற்சியாக இருந்தது. தேவன் துன்மார்க்கத்தில் பிரியப்படுகிறவரல்ல: "***தீமை உம்மிடத்தில் சேர்வதில்லை***" (சங். 5:4); ஆனால் அவ்வாறாக இருந்தபோதிலும், தேவனுடைய சமாதானத்துக்கு ஒருபோதும் இடையூறு ஏற்பட்டதில்லை. தவறு செய்யாத அவருடைய ஞானம், அவருடைய வல்லமையின் பராக்கிரமம், நீதியை முழுமையாக போற்றி பாராட்டுதல், பரிசுத்த அலங்காரத்தின் மீது தீவிரமான ஆர்வம், மிகவும் ஊக்கமுள்ள அன்பு ஆகியவற்றோடு உபத்திரவத்தின் மத்தியிலும், பொறுமையாகவும், சமாதானமாகவும், சந்தோஷமாகவும்கூட இருப்பதால், அவருக்கு விரோதமாக பாவிகளால் செய்யப்பட்ட விபரீதங்களையும் ஆறாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக சகித்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால் ஏழாவது ஆயிர வருடத்தின்போது [1874-2874] தேவனுடைய ஏற்பாட்டின்படி பிதாவின் மகிமையான குணாம்சத்தைப் பரலோகத்திலும் பூமியிலும் உள்ள எல்லா சிருஷ்டிகளுக்கும் பரிபூரணமாக வெளிப்படுத்துவது நம்முடைய கர்த்தராகிய இயேசுவுக்குரிய மகிழ்ச்சிகரமான சிலாக்கியமாயிருக்கும். அதன் பின்பு, பிதாவானவர் தாம் நிறைவேற்றி முடித்த வேலையின் பேரழகிலும், பரலோகத்திலும், பூமியிலும் உள்ள அவருடைய குடும்பத்தின், நித்திய சமாதானம் மற்றும் மகிழ்ச்சியிலும், "***சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட்டதிலும்***

(முறுபடியும் ஒரே தலையின்கீழ் ஒன்று சேர்க்கப்படும்)" (எபே. 1:9 டயக்லாட்) களிகூருவார்.

ஆயினும் சீர்திருத்த முடியாதபடி கேடடைந்த, விழுந்துபோன தேவனுடைய புத்திரர்கள் அநீதியை விரும்பினதாலும் முந்திய நிலைமைக்கு சீர்படுத்த முடியாததாலும் கைவிடப்பட்டு, சுதந்தரத்தை இழந்து, அவர்கள் அறுப்புண்டு போகிற வரைக்கும் இந்த ஆசீர்வாதமான நிறைவேறுதல் உணர்ந்து கொள்ளப்பட மாட்டாது. "**அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்.**" (அப். 3:23). இது சகலத்தையும் சிருஷ்டித்தவரும், பிதாவுமாயிருக்கிறவருக்கு இறுதியான பிரியமற்ற கடமையாயிருக்கும். இது ஒரு வருத்தமான கடமைதான் என்று அவரே தீர்மானமாக அறிவிக்கிறார்; என்றபோதிலும்கூட சர்வலோகத்தின் நீதி மற்றும் சமாதானத்தின் நலன்களுக்காக இதைச் செய்து முடிக்கக்கூடிய மனவலிமையுள்ளவராக இருக்கிறார். அவர் சொல்வதைக் கேளுங்கள்: "**கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்: இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள், நீங்கள் ஏன் சாக வேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு.**" (எசே. 33:11).



*"நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்." கலா. 6:9.*

ஓ, தேவனுடைய சமாதானம் என்பது பெருங்குழப்பங்கள் மற்றும் எந்த வகையான துயரம் மற்றும் வேதனையின் மத்தியிலும் அவற்றுடன் இணக்கமுள்ளதாக இருக்கிறது. இது வெளித்தோற்றமான சூழ்நிலைகளை சார்ந்திருக்கிறதில்லை, மாறாக சரியாகச் சமநிலைப்படுத்தப்படும் மனது மற்றும், பூரணமான இருதயத்தின் நிலைமைகள் மீது சார்ந்திருக்கிறது. அப்படிப்பட்ட சமாதானமாகிய தேவனுடைய சமாதானம் – நம்முடைய கர்த்தராகிய இயேசுவாலுங்கூட முக்கியமான நிகழ்ச்சிகள் நிரம்பிய அவருடைய பூமிக்குரிய ஜீவியத்தில் எல்லா பிரச்சனைகள் மற்றும் குழப்பத்தின் மத்தியிலும் அனுபவிக்கப்பட்டது. மேலும் நம்முடைய கர்த்தர் உலகத்தை விட்டு எடுத்துக்கொள்ளப்படும்போது தம்முடைய சீஷர்களுக்கும் இதை சுதந்தர உரிமையாகத் தந்தருளினார் என்பது நம்முடைய கவனத்துக்கு கொண்டு வரப்படுகிறது. அவருடைய சொந்த வார்த்தைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்னவெனில்: "**சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன், உலகம் கொடுக்கிற பிரகாரம்** [குறைந்த அளவிலோ அல்லது அழியும் தன்மையுள்ளதாகவோ அல்ல] **நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக!**" என்பதாகும். (யோவா. 14:27). ஆம். இதுவே இந்த நாளிலும் அவருடைய சீஷராயிருக்கிறவர்களான, பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகள் பெற்றிருக்கும் பாரம்பரிய சுதந்தரமாகும்.

மிகுந்த மன உருக்கத்துடனும், மிகுந்த இரக்கத்துடனும், நம்முடைய கர்த்தர் தம்முடைய பூமிக்குரிய வாழ்க்கையின் கடைசி இரவின்போது – தாம் சீஷர்களிடமிருந்து விடைபெறும் நேரத்தின் ஆசீர்வாதங்களாக தமக்கு அன்பான சீஷர்களுக்கு தம்முடைய சுதந்தர உரிமையாகிய சமாதானத்தைத் தந்தருளினார். அவர் வாரிசுரிமையாக தமக்குப்பின் வருபவருக்கு ஒப்படைக்க வேண்டியதில், இது பெரும் ஐசுவரியமான சுதந்தர உரிமையும், மரண சாசனமாகக் கொடுக்க வேண்டியதும் விலைமதிப்பற்ற ஒன்றாகவும் இருந்தது. இது அவர் தாமே பெற்றிருந்த ஆத்தும அமைதியும், மனதின் இளைப்பாறுதலும், கலக்கமற்ற தன்மையான வாக்குத்தத்தமாகிய தேவனுடைய சமாதானமாயிருந்தது. இது தீமை அனுமதிக்கப்பட்டதினால் ஏற்பட்டிருக்கிற எல்லா குழப்பங்கள் மத்தியிலும்கூட பிதாவானவர் எப்போதுமே தம்மில் அனுபவித்ததான அதே சமாதானமாக இருந்தது; ஆனால் இயேசுவின் சமாதானம் அதே இடத்திலிருந்து தோன்றியதாக இல்லை. இந்த சமாதானம் யேகோவா தேவனில் தற்சார்பாக மையப்படுத்தப்பட்டிருந்தது; அவர் தமக்குள்ளாக வல்லமை மற்றும் ஞானத்தின் சர்வ வல்லமையை உணர்ந்தார்; கிறிஸ்துவின் சமாதானம் தமக்குள் அல்ல தேவனிடத்தில் மையப்படுத்தப்பட்டிருந்தது. அதாவது தேவனுடைய ஞானம், வல்லமை மற்றும் கிருபை ஆகியவற்றில் அவர் வைத்திருந்த விசுவாசத்தில் மையப்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, "**என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்**" என்ற தேவனுடைய சமாதானத்தை – கிறிஸ்துவின் சமாதானத்தை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் – அது நிச்சயமாக அவருடையதைப் போலவே விசுவாசத்தின் மூலமாக தேவனிடத்தில் மையப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆம், கிறிஸ்துவின் சமாதானம் விலைமதிப்பற்ற சுதந்தர உரிமையாக இருந்தது. ஆயினும் உபத்திரவமாகிய புயல் மேகமானது அப்போது மிகவும் இருள்மயமாக வளர்ந்த போதும்கூட, இந்த வார்த்தைகள் நேரடியாக சொல்லப்பட்ட, அந்த சீஷர்களின் தலைகள்மீது அதனுடைய மூர்க்கத்தோடு திடீரென்று தாக்கிற்று. அது கிருபையாக மரண சாசனத்தால் கொடுக்கப்பட்ட சுதந்தரத்தை தொடர்ந்து வந்தது. அவர்களுடைய விசுவாசத்தை மையப்புள்ளியிலிருந்து சுற்றுக் கோட்டின் எல்லைக்குத் தள்ளும்படிக்கு அவர்களுடைய இருதயத்தில் தடுமாற்றமும் கலக்கமும் அடையும்படி தாக்கிற்று.




"... நமது மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." - ஏசா. 53:4-5.

கர்த்தர் இந்த வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கும்போது, கொலை செய்யும் திட்டத்துடன் அருவருப்பானவனும் காட்டிக் கொடுத்தவனுமாகிய யூதாஸ், வெளியே சென்றுவிட்டான். அதன்

பின்பு கெத்செமனேயின் மரணத்துக் கேதுவான துக்கத்தையும், சீஷர்கள் தங்களுக்கு அன்பான கர்த்தருடைய தவிர்க்கமுடியாத மரணத்தையும் உணரத் தொடங்கியபோது, அவர்கள் மத்தியில் திகிலும், குழப்பமும் தொடர்ந்தது. விரைவிலேயே அவரை இரக்கமின்றி குற்றஞ்சாட்டி துன்பப்படுத்தினவர்களுக்கு முன்பாக பிலாத்துவின் விசாரணைக் கூடத்திலும், ஏரோதின் அரண்மனையிலும் அவர் தனித்து நின்றபோது அவரைப் பாதுகாத்து காப்பாற்ற அவர்கள் பலமற்றவர்களாயிருந்தபோது நிச்சயமற்ற சூழ்நிலையில் மூச்சற்றிருந்தவர்களுக்கு பின்வரும் அதிபயங்கரமான தீமையின் முன்னறிகுறிகள் மிகுதியானது, அதன்பின்பு கொடுந்துயரான முடிவு – அதாவது சிலுவையிலறையப்படும் குலை நடுங்கச் செய்கிற பயங்கரங்கள் வந்தன.

இந்த குறிப்புகள், வாக்களிக்கப்பட்ட சமாதானம் எங்கே? என்று நம்மை விசாரித்துக் கேட்கும்படிச் செய்கிறது. இந்த சீஷர்கள், பயத்தாலும், அச்சத்தாலும் மேற்கொள்ளப்பட்டபோது, எல்லோரும் அவரை கைவிட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டனர்; பரி.பேதுரு, அவரைக் காப்பாற்ற மிகவும் வாஞ்சையாயிருந்த போதிலும், மூன்றுமுறை தன்னுடைய கர்த்தரை மறுதலித்து, ஒருபோதும் அவரை அறியவில்லை என்று மறுத்து, சபிக்கவும், சத்தியம் செய்யுமளவுக்கு அச்சத்தால் நிரம்பியிருந்தான். சமாதானம் அதுவரை வரவில்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம்; ஏனெனில் அப்போஸ்தலன் பவுல் நமக்கு, "***எங்கே மரண சாசனமுண்டோ, அங்கே அந்த சாசனத்தை எழுதினவனுடைய மரணமும் உண்டாக வேண்டும், எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரண சாசனம்*** (உயில்) ***உறுதிப்படும். அதை எழுதினவன் உயிரோடிருக்கையில் அதற்குப் பெலனில்லையே***" (எபி. 9:16,17) என்று கூறுகிறார். ஏனெனில் தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும், அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். ஆனால் பயங்கர துக்கரமான அந்த சம்பவம் முடிந்து, "***எல்லாம் முடிந்தது***" என்ற சத்தம் அவர்களுடைய வாஞ்சையுள்ள காதுகளில் விழுந்த போது, அது அவர்களுக்கு விசித்திரமாகத் தோன்றியது. என்றாலும் சமாதானம் அவர்களுடைய துயரமுள்ள இருதயங்களுக்குள் இரகசியமாக பிரவேசிக்க ஆரம்பித்ததற்கான ஆதாரம் கிடைத்தது. வானங்கள் இருளடைந்தது, பூமி அதிர்ந்தது, கன்மலைகள் பிளந்தது, தேவாலயத்தின் திரைச் சீலை கிழிந்தது – இவையெல்லாம் உலக மனுக்குலத்தார் பெற்றுக் கொள்ள இயலாததும் இன்னமும் பெற்றுக் கொள்ள முடியாததுமான ஆறுதலின் செய்தியை அவர்களுக்குத் தெரிவித்தது.

இந்த நிகழ்வுகளின் மொழிநடையானது, உலகத்தாரிடம், (யூதர்கள் மற்றும் புறஜாதியார், இரண்டு சாராருமே இந்த குற்றத்தில் பங்கு பெற்றவர்கள்). அவர்களுக்கு எதிரான தேவ கோபம் மற்றும் தேவனுடைய கடுஞ்சினத்தைத் தெரிவித்தது. பயம் ஜனங்கள் மீது விழுந்தது, அந்த பயங்கரமான நாளின் கூக்குரலும், கொந்தளிப்பும் மறைந்து போனபோது, அவர்கள் தங்கள் மார்பில் அடித்துக் கொண்டு தங்கள் வீடுகளுக்கு திரும்பிப் போனார்கள். ரோமனான நூற்றுக்கு அதிபதியும், அவனுடன் இருந்தவர்களும் மிகவும் பயந்து, "மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன்!" என்றார்கள். ஆனால் கர்த்தருடைய சீஷர்களுக்கு, இந்த சம்பவங்கள் மிக வித்தியாசமான ஒரு மொழியைப் பேசுவதாக இருந்தது. இத்தகைய சம்பவங்களில் தேவனுக்கு தங்களைப் பிரதிஷ்டை செய்திருந்த சீஷர்கள் ஓர் நம்பிக்கையின் இரகசியத்தை பெற்றுக் கொண்டனர்.




"பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தர் நானே." – ஏசா. 48:17

இந்த ஐசுவரியமான சுதந்தர உரிமையான சமாதானம் மரண சாசனத்தின் மூலம் மெய்யான ஒரே சபைக்கு ஆசீர்வாதமான சுதந்தரமாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது! கர்த்தர் நம் எல்லார் மீதுமுள்ள தம்முடைய இரக்கத்தை அந்த நாளில் தானே காட்டினார்; அவர் தம்முடைய ஜெபத்தில், "**நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்**" (யோவா. 17:20) என்று கூறினார். நாம் இந்த வசனத்தை சற்று விளக்கமாக ஆராய்வோமாக: இயேசு தம்முடைய அப்போஸ்தலர்களிடத்தில் சொல்லும்போது, "***இவர்களுக்காக மட்டும்***" என்றார். அதன் பின்பு, ஆசீர்வாதமான அந்த சுதந்தரம், "***விசுவாசிக்கிறவர்களுக்காகவும்***" என்று விரிவாக்கப்பட்டது. யாரெல்லாம் முழுமையாகவும், மிகவும் உண்மையாகவும் அவரிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறார்களோ, அவர்கள் அவருடைய சீஷர்களாக இருக்கும்படியாக அவர்களுடைய விசுவாசமே அவர்களை உலக மக்களிடமிருந்து பிரித்தெடுக்கும். எஜமானர் தம்முடைய சீஷர்களுடன் சேர்ந்து ஏறெடுத்த கடைசியான ஜெபத்தில் யார் பிரதிஷ்டையின் மூலமாக அல்லது தேவனுக்குத் தங்களை அர்ப்பணிப்பதின் மூலமாக தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறார்கள் என்பதை மனதில் வைத்திருந்தார். பிதாவானவர் ஏதோ சில அற்புதமான வல்லமையைப் பயன்படுத்தி பொதுவான ஜனங்களை சத்தியத்தை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கும், அவர்மீது பயபக்தியான ஆவியுடனிருக்கும்படியும் செய்வதற்காக இயேசு விண்ணப்பம் செய்யவில்லை. இது அதன் கருத்தும் அல்ல. ஏனெனில் பிரதிஷ்டை செய்தல், பரிசுத்தமாகுதல் மற்றும் அர்ப்பணித்தல் முதலான வளர்ச்சி நிலையை முன்னமே வந்தடைந்தவர்களுக்காக அவர் விண்ணப்பத்தை ஏறெடுத்தார். உலகத்தாருடன் நடவடிக்கை செய்வதற்கான அவருடைய காலம் இன்னும் வரவில்லை!

விசுவாசத்திற்கு ஆதாரமாயிருக்கும் சாட்சியமானது மனுஷனுடையதல்ல, அது தேவனுடையது ஆகும். அவைகள் "**உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்: உம்முடைய வசனமே சத்தியம்.**" (யோவா. 17:17). அவர்கள் தேவனுடைய ஜீவனாலே பிழைத்திருப்பவர்களாக, அவருடைய ஆவியை சுவாசித்து, அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து, அவருடைய கிரியைகளைச் செய்து, அவருடைய வார்த்தைகளைப் பேசி, அவருடைய சாட்சியை பரப்புகிற கருவிகளாகவும் இருக்கிறார்கள். கர்த்தர் பன்னிரெண்டு பேரையும், அவர்களுடைய வார்த்தைகளையும் கனப்படுத்தி, அவர்கள் மூலமாக நாம் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபித்தார். அழைக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட, உண்மையுள்ள பிரதிஷ்டை செய்த தேவ பிள்ளைகள், அதே செய்தியை மற்றவர்களுக்கு கொடுக்கும்படியாக வழிநடத்தப்பட்டு வருகின்றனர். அது உலகத்தாரை மனமாற்றமடையச் செய்வதற்காக அல்ல, மாறாக மெய்யான

ஒரே சபையின் அழைப்பு, போதித்தல், பரீட்சித்தல், சீர்திருத்துதல் மற்றும் பக்தி விருத்தியடையச் செய்தலுக்குமாகும். "**தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.**" (2 தீமோ. 1:7).

வாக்களிக்கப்பட்ட சமாதானம் சொற்ப காலம் மட்டுமே இருக்கிற உலக சமாதானம் அல்ல. சில நேரங்களில் நல்வாய்ப்பின் புன்னகையும் நண்பர்கள் பெருக்கமும், ஆரோக்கியமும் நிலைத்திருக்கிற கொஞ்சக் காலத்தில் அனுபவிக்கிற உலக சமாதானம் ஏழ்மை வரும்போதும் நண்பர்கள் விட்டு விலகிப் போகும் போதும்; ஆரோக்கியம் குறையும்போதும், மரணம் இருதயத்தின் பொக்கிஷங்களை திருடிச் செல்லும்போதும் விரைவில் மறைந்து போகும். "**என்னுடைய சமாதானம்**" என்பது கிறிஸ்து தாமே விசுவாசத்தினால் அனுபவித்த தேவ சமாதானமாகும். அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நமக்காக தரித்திரரானபோதும், நண்பர்களை ஒருவர்பின் ஒருவராக இழந்தபோதும், அவருடைய இறுதி மணிவேளையில் எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையிலும் சிலுவையில் அந்த சமாதானம் அவரிடத்தில் இருந்தது. நஷ்டங்கள், துன்பங்கள், இகழ்ச்சி, அவமதிப்பு மற்றும் சிலுவையின் மரண வேதனைகளுக்கு மத்தியிலும் அவருடைய சமாதானம் தொடர்ந்து நிலைத்திருந்தது. இந்த "**தேவ சமாதானத்தை**" தற்கால ஜீவியத்தின் எதிர்பாராத மாற்றங்கள் எதுவும் அழிக்க முடியாத ஒன்றாக இருக்கிறது. சர்வவல்லவரால் ஆசீர்வதிக்கப்பட்ட எப்பேற்பட்ட ஐசுவரியமான சுதந்தர உரிமையை கர்த்தர் தமக்கு மிகவும் அன்பான ஜனங்களுக்கு விட்டுச் சென்றிருக்கிறார்?

வாக்களிக்கப்பட்ட சமாதானம் என்பது உலகம் எப்பொழுதும் அறிந்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவோ, மதிப்புணர்ந்து போற்றிப் பாராட்டக்கூடியதாகவோ இருப்ப தில்லை. ஏனெனில் இந்த சமாதானத்தைப் பெற்றிருப்பவர்கள், கர்த்தரைப் போலவும், பரமபிதாவைப் போலவும்கூட, மெய்யாகவே ஓர் புயல் நிறைந்த பாதையைப் பெற்றிருப் பார்கள். உண்மையுள்ளவர்கள் கர்த்தரோடுகூட நடப்பதற்கு, தீமையை அனுமதித்ததில் தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறும் வரைக்கும் அது நிச்சயமாக அப்படியே இருக்க வேண்டும்; நாம் திட்டவட்டமாக முன்னெச்சரிக்கை செய்யப் படுகிறோம், ஆனால் எல்லா புயல்களினூடேயும் இந்த சமாதானம் நிலைத்திருக்கும் என்ற உத்திரவாதத்துடன் முன்னெச்சரிக்கை செய்யப்படுகிறோம். உலகத்தில் இருப்பவர் களுக்கு உபத்திரவங்கள் உண்டு, ஆனால் கர்த்தருக்குள் இருப்பவர்களுக்கோ சமாதானம் இருக்கும். "**என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.**" (யோவா. 16:33).

கொடுக்கப்பட்ட விஷயங்கள் புரிந்து கொள்ள முடியாது என நமது பாடத்தின் தலைப்பு வசனம் (ஆங்கில வேதாகமத்தில்) குறிப்பிடுகிறது. "**எல்லாப் புத்திக்கும்** [எண்ணங்களுக்கும் - conception] **மேலான**" என்று டயக்லாட் மொழிபெயர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் சரியான கருத்து – உலக அறிவு எல்லாவற்றுக்கும் மேலானது – என்று நாம் குறிப்பாகச் சொல்லலாமல்லவா? ஏனெனில் தேவனுக்கு முழுமையாகத் தன்னை பிரதிஷ்டை செய்து, சத்தியத்தை நன்கு கற்று அதைப் புரிந்து கொள்ளுகிற தேவனுடைய பிள்ளைகள் தேவனுடைய ஆழமான காரியங்களை புரிந்து கொள்ள முடியும்! இந்த வேத வசன ஆராய்ச்சி, இது விசுவாசத்தின் மூலம் கிடைக்கும் இருதயத்தின் இளைப்பாறுதல் என்றும், இந்த சமாதானத்தில் அதைப் பெற்றிருப்பவரின் மனதின் பல்வேறு தன்மைகள் எல்லாவற்றுக்கும் ஒரு மனதிருப்தி இருக்கிறது என்பதையும் புரிந்து கொள்ளும் ஒரு திறமையைத் தன்னுடன் கொண்டு வருகிறது. டயக்லாட் மொழிபெயர்ப்பானது, உங்கள் இருதயங் களை கவலையிலிருந்தும், பயஉணர்ச்சியிலிருந்தும் "**காத்துக் கொள்ளும்**" (பாதுகாக்கும்) என்று சொல்வதின் மூலமாக நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தை நாம் சரியாகப் புரிந்து கொள்ள அது உதவுகிறது. கர்த்தருடைய ஜனங்கள் கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருந்து தங்கள் இருதயத்தை அவர்மீது மனதிருப்தியுடன் இளைப்பாறச் செய்ய வேண்டும்; "**தேவன் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்காக ஆயத்தஞ் செய்திருக்கிறவற்றை**" படிக்கவும், அவற்றில் சந்தோஷ மாயிருக்கவும் வேண்டும். இந்த சமாதானம் தொடர்ந்து ஒவ்வொரு பகை உணர்வு அல்லது கவலைப்படும் எண்ணம் அல்லது பயத்துக்கு எதிராக தொடர்ந்து பாதுகாப்பு அரணாக நிற்கிறது. இது கிறிஸ்தவனுடைய மனதை, அவன் கர்த்தருடன் இருதயப்பூர்வமான சமாதானத்தையும், சிநேகத்தையும், ஐக்கியத்தையும் பெற்றிருக்கும்படி காத்துக் கொள்கிறது.


நமது கர்த்தருடைய விசுவாசத்தின் மொழிநடை, "**நீதியுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை: நான் உம்மை அறிந்திருக்கிறேன்**" என்பதாக இருந்தது. அவர் ஆதியிலிருந்தே பிதாவானவருடன் இருப்பதினால், அவருடைய அன்பையும், அவருடைய நற்குணத்தையும் உணர்ந்தவராக, அவருடைய வல்லமையைக் கண்டு அவருடைய நீதியும், அவருடைய அன்பான இரக்கமும், தகப்பனுக்குரிய அவருடைய எல்லா கிரியைகளின் மீதான பரிபாலனமும் முத்திரையிட்டிருப்பதையும் அறிந்திருக்கிறார். எனவே தான், "**என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார், அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்**" (ஏசா. 53:11) என்று எழுதப்பட்டிருக்கிறது. பிதாவைக் குறித்து அவருக்கிருந்த அறிவு, எதிர்காலத்தைக் குறித்த தேவனுடைய நோக்கங்கள் எல்லாவற்றிலும் விசுவாசத்திற்கான உறுதியான ஆதாரத்தை அவருக்குக் கொடுத்தது. அவர் விசுவாசத்தின்மூலம் நடக்க முடிந்தது, நடக்கவும் செய்தார். அத்துடன் அந்த விசுவாசம் எல்லா தடைகளையும் மேற்கொண்டு, மரணத்தின் மீதும்கூட அவரை வெற்றியடையக் கூடியவராக்கியது.

"**நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்**" என்று நமக்கு போதனையாக எழுதப்பட்டிருக்கிறது – தேவன் மீது கட்டப்பட்டிருக்கும் அந்த விசுவாசம், நம்முடைய காரியத்தில் பிதாவைக் குறித்த நம்முடைய கர்த்தருடைய சாட்சியின்மீது கட்டப்படுகிறது; மேலும் "**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்**" (எபி. 11:6) என்று மீண்டும் எழுதப்பட்டிருக்கிறது. உறுதியானதும், அசையாததுமான விசுவாசத்தின் மூலமாக மட்டுமே, தேவ சமாதானமான – கிறிஸ்துவின் சமாதானம் – அவருடைய ஜனங்களிடம் நிலைத்திருக்கும். கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களுடனும், சீஷர்களுடனும் இருந்தபொழுது, அவர்கள் பிதாவின் வெளிப்பாடுகளை அவரில் கண்டார்கள். அவர்களுடைய விசுவாசம் பலமுள்ளதாயிருந்ததுடன், அவர்கள் அவரிடத்தில் சமாதானம் பெற்றிருந்தார்கள். எனவே "**நான் அவர்களுடனேகூட**

**உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக் கொண்டேன்.**" (யோவா. 17:12) என்று அவர் சொன்னபடியே இருந்தது. ஆனால் அதுவரை இல்லையென்றாலும், அவர் அவர்களை விட்டுப் பிரிந்து சென்றபிறகு அவர்களுடைய விசுவாசம் தேவனில் நங்கூரமிடப்பட்டிருந்தது. பெந்தெகொஸ்தே நாளுக்குப் பிறகு அவர்கள் கிறிஸ்து அனுபவித்ததான அதே சமாதானத்தை அனுபவித்தார்கள் – அதாவது, அது அவர்கள் விசுவாசத்துடன் தொடர்ந்து மீட்பரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பார்களானால், தேவன் அவர்களை குமாரர்களாகவும், சுதந்தரவாளிகளாகவும், கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரராகவும் ஏற்றுக் கொண்ட உண்மையை அறிந்து கொண்டதினால் வந்த ஆசீர்வாதமான சமாதானமாகும்.

இந்த பொருத்தமான கருத்தை நாம் கவனிப்போமாக: நம் பரலோகப் பிதாவிடமிருந்து கிடைத்த இந்த மகா பெரிய வெகுமதியை நாம் எவ்வாறு வளர்த்துக் கொள்ளப் போகிறோம்? வாழ்க்கையின் புயல்கள் எவ்வளவு தீவிரமாக நம்மைத் தாக்கினாலும் கவலையில்லை, நாம் நம்முடைய நங்கூரத்தை ஒருபோதும் விட்டுவிடவோ, காற்றினால் நாம் அடித்துச் செல்லப்படுவதை அனுமதிக்கவோ கூடாது, ஆனால், "தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது" என்பதையும், "**அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்**" என்பதையும்; "**தேவன் தாம் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார்**" என்பதையும் எப்பொழுதும் நினைவிற் கொள்ள வேண்டும். நம்முடைய மனுஷீக அபூரணங்களையும், பலவீனங்களையும் பொருட்படுத்தக்கூடாது. அவைகளை மூடும் மூடலாக நாம் கிறிஸ்துவின் தற்காலிகமான நீதியைப் பெற்றிருக்கிறோம், அத்துடன் "**பிதா தாமே நம்மை சிநேகிக்கிறார்.**"

தேவ சமாதானம் நமது இருதயங்களில் ஆளுகை செய்ய வேண்டுமானால், நம்முடைய நங்கூரத்தை ஒருபோதும் நாம் விட்டுவிடக் கூடாது, "**சாத்தானின் சாவுக்கேதுவான யுத்தம் நமது தைரியத்தை இழக்கச் செய்ய இடங்கொடுக்கவும்கூடாது.**" "**அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்**" (யோபு 13:15) என்பதே எப்போதும் நமது இருதயத்தின் முழக்கமாக இருக்க வேண்டும். இந்த விசுவாசத்துடன் தேவசமாதானம், எஜமானர் மரண சாசனமாக நமக்குக் கொடுத்த சமாதானம் என்றென்றும் நிலைத்திருக்கும். "**அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான** (அந்த) **தேவ சமாதானம்**




**உங்கள் இருதயங்களையும், உங்கள்** (மனங்களையும்) **சிந்தைகளையும் கிறிஸ்து** (இயேசுவின் மூலம்) **இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.**" பிலி. 4:7 (டயக்லாட் மொழி பெயர்ப்பு பார்க்கவும்).

கிறிஸ்தவ போராட்டத்தின் மத்தியில், நம்முடைய இருதயங்கள் உற்சாகமாயிருப்பதாக. நம்முடைய மனங்கள் தேவனுடைய நோக்கங்கள் யாவும் நிறைவேற்றப்படும் என்ற நிச்சயத்தில் மட்டுமல்லாமல், "**உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்**" என்பது போன்ற தனிப்பட்ட தயவளிக்கும் வாக்குத்தத்தங்களின்மீதும் நிலைத்திருப்பதாக.

கிறிஸ்தவன் ஒருவனுக்கு அவனுடைய சத்துருக்களுக்கு முன்பாக அதிக சேதம் விளைவிப்பது விசுவாசமாகிய நங்கூரத்திலிருந்து தற்காலிகமாகக்கூட தன் பிடியை விட்டு விடுவதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அது அற்ப காலமேயானாலும்கூட அதிக சேதத்தை விளைவிக்கும். ஒரு நொடிப் பொழுதாகிலும் ஒருவன் அவ்வாறு செய்தால் இருள் அவனைச் சூழ ஆரம்பிப்பதைத் தவிர்க்க முடியாது; அவன் பிதாவின் முகத்தின் பிரகாசத்தைக் காணமுடியாது. ஏனெனில் "**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.**" அவன் மறுபடியும் நங்கூரத்தைப் பற்றிக் கொள்ள போராடும் போது பொதுவாக அவனுடைய மனுஷீகக் குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்ட சந்தேகங்கள், பயங்கள் ஆகிய இருளின் வல்லமைகள் அவனைப் பலமாகத் தாக்குகின்றன. அக்குறைபாடுகள் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட்டிருக்கின்றன என்பதை அவன் எப்போதும் மனதில் கொண்டிருக்க வேண்டும். சங். 37:4. "**கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்**" – புயல் மற்றும் சூறாவளி மத்தியிலும்கூட தேவ சமாதானம் பெற்றிருப்பாய். ***




For all LHMM
Bible Study material:

*For English, Tamil, Malayalam and Kanada Magazines,*
*Translated Leaflets, Tracts,*
*Booklets,*
*Parousia & Epiphany Volumes, etc.,*
*Contact :*



**Laymen's Home Missionary Movement**


11/119-3, Near water tank, South Street,
Mukuperi - 628 616, (Near Nazareth),
Thoothukudi District, Tamil Nadu,
India.

# கடைசியாக, சகோதரரே, சிந்தியுங்கள்!

***Finally, brethren, think!***

**“கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்” - பிலி. 4:8.**

மனதின் பெரும் வல்லமையையும், நம்முடைய ஜீவியத்தின் எல்லா காரியங்களின் மீதான அதினுடைய ஆற்றல் வாய்ந்த செல்வாக்கையும் கல்வி கற்றவர்களிலும் அறிவியல் சார்ந்த ஜனங்களிலும் கூட, ஒப்பிடத்தக்க அளவில் சிலர் மட்டுமே மதிப்புணர்ந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். சிந்தித்தல் குறித்த இந்த பாடத்தின் வேத வசனங்களை நாம் ஆழமாக ஆராய்ந்து பார்ப்போமாக! “**அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்.**” (நீதி. 23:7). பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கவும், பிரதிபலிக்கவும், ஆழமாக சிந்திக்கவும் அதைப் பற்றிய ஓர் நம்பிக்கையைப் பெறுவதும் அவசியமாயிருக்கிறது. “**இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன்** [விசுவாசி] **பாக்கியவான்**” (சங். 1:2). அவைகளையே நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் – நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறோம் – நினைவு கூர்ந்து ஞாபகப்படுத்தி – மனதில் படமாக வடிவமைத்து – பொருத்தமான ஒரு கருத்துருவை உருவாக்குகிறோம். “**உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்**” [சங். 119:148 (இரவு முழுவதும் என் கண்கள் விழித்திருக்கிறது) NKJ] என்று சங்கீதக்காரன் போல, நாமும் சொல்ல முடியும். ஒரு காரியத்தை தீர்மானிப்பதற்கு அல்லது முடிவெடுப்பதற்கு முன்பு அதைக் குறித்து கவனமாக சிந்திக்கும் சிலாக்கியத்தில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்; ஆம், நம்முடைய மனங்களைத் தூண்டுவதின் மூலம் தேவனுடைய வார்த்தைகளை நாம் ஆழமாக சிந்திக்கிறோம்.




**2 தீமோ. 1:7**

பெரும்பான்மையான ஜனங்கள் சரியானதைச் செய்வதற்கு பதில் தவறானதைச் செய்கிறார்கள் என்றும், அறியாமையே அவர்களுடைய மிக முக்கியமான இக்கட்டுகளாகவும் தடுக்கலின் கற்களுமாயிருக்கிறது என்றும் நாங்கள் உறுதியாக நம்புகிறோம். ஆனால் பொதுவாக வேதாகமம் தேவனுடைய பிள்ளைகளுக்கே எழுதப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. ஏனெனில் (புரிந்து கொள்ளுதலின்) உணர்வை அருளுகிற பரிசுத்த ஆவியின் இருதயத்துக்கு இதமளிக்கும் மற்றும் ஊக்கமளிக்கும் செல்வாக்கைப் பெற்றுக் கொள்வதினால் அவர்கள் நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடன் விசேஷித்த உடன்படிக்கைக்குள்ளாக வந்திருக்கிறார்கள். எனவே இந்த உலகத்தின் மீது அக்கறை கொண்டிருக்கும் அளவுக்குத்தக்கதாக, நம்முடைய ஆண்டவரின் மாதிரியை பின்பற்றுவதும், விசேஷமாக தன்னுடைய உடன் கிறிஸ்தவ சிநேகிதர்களாகிய கிறிஸ்துவுக்குள் தன்னுடைய சகோதரர்கள் மீதும் அக்கறை கொண்டிருப்பதும் கிறிஸ்தவனுடைய கடமையாக இருக்கிறது.

கிறிஸ்துவின் ஆயிரவருட யுக மத்தியஸ்த ஆளுகையில் உலகமானது போதிக்கப்பட்டு அபிவிருத்தியடையும். ஆனால், இப்பொழுது இந்த தற்கால ஜீவியத்தில் அபிவிருத்திக்கான ஒரே வாய்ப்பானது, அவர்களுடைய பங்கில் (புரிந்து கொள்ளுதலின்) உணர்வை அருளுகிற பரிசுத்த ஆவியின் இருதயத்துக்கு இதமளிக்கும் மற்றும் ஊக்கமளிக்கும் செல்வாக்கைப் பெற்றிருப்பவர்களுக்கு மட்டுமே அருளப்படும். தேவனுடைய ஜனங்களாகிய எந்த வகுப்பாருக்கும், பிரதிஷ்டையின் குறிக்கோளானது, ஒரு வெகுமதியைப் பெறுவதற்காக இருக்கக் கூடாது என்பதில் சந்தேகமில்லை; இருப்பினும், பிரதிஷ்டை செய்த பிற்பாடு, ஒருவனுடைய வகுப்பின் தகுதி நிலைமையை பொறுத்து, ஆண்டவர் தம்முடைய இரக்கத்தினால் அளிக்கும் வெகுமதிக்காக நம்பிக்கைக் கொள்வது தகுதியானதாய் இருக்கிறது. உயிர்த்தெழுதலின் காலத்தில், பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்களில் உண்மையுள்ளவர்களுக்கு நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பங்கடையும் சிலாக்கியம் கொடுக்கப்படும். “**அப்பொழுது, நீ பாக்கியவானாயிருப்பாய்: நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்.**” அநேகமாக பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் புது உடன்படிக்கையின் கீழ், தங்களுடைய ஆயிர வருட யுக ஸ்தானத்தையும் ஊழியத்தையும் பெறுவதற்கு, பாத்திரவான்களின் கீழ் முதலாவது பூரணமடைந்த வகுப்பாராக இருப்பார்கள். இந்த ஜீவியத்தில் அவர்கள் அடைந்திருக்கிற முன்னேற்றத்தின்

காரணமாக, தனிநபராக பரிசுத்த பெரும்பாதையில் முன்னேறிச் சென்று திறன்களின் பூரணத்தை அடைவதற்கு பெரும்பாலும் அவர்களுக்கு அதிக காலம் ஆகாது. (PT 2002, பக்கம் 44)

அப்போஸ்தலருடைய புத்திமதியை ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்குரியதாகவும், மேலும் சபை முழுவதுக்கும் உரிய பொதுவான புத்திமதியாகவும் எடுத்துக் கொண்டு – நமது பாட வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்ட வழியில் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உறுதிப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். ஒவ்வொருவனும் அவனுடைய மனதைக் கவனித்துப் பேணுவதற்கு பொறுப்பாளியாயிருக்கிறான். கிறிஸ்தவர்களாகத் தகுதி யாவதற்கு நாம் நம்முடைய சித்தங்களைக் கர்த்தருக்குக் கொடுத்துவிட்டோம். அதுமுதற்கொண்டு நம்முடைய சித்தங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்க மாட்டோம் என்றும், மேலும் அவைகளைப் புறக்கணித்துவிட்டு கர்த்தருடைய சித்தத்தின் வழிகாட்டுதலுக்கு கீழ்ப்படிந்து நடப்போம் என்றும் ஒத்துக் கொண்டோம். இந்த நிபந்தனையின் பேரில் கர்த்தர் நம்மை அவருடைய குடும்பத்துக்குள்ளாக ஏற்றுக் கொண்டார். மேலும் இந்த ஒப்பந்த விதிமுறைகளைப் பின்பற்றத் தவறுவது நமது உடன்படிக்கைக்கு எதிரானது. "**நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே** (உங்களைக் குறித்த) **தேவனுடைய சித்தமாயிருக்கிறது**" (1 தெச. 4:3) என்று பெப்ருவரி 5 மன்னாவில் நாம் வாசிக்கிறோம். தேவனுடைய சித்தத்தை ஆராய்ந்து கண்டுபிடிக்க நாம் வேத வாக்கியங்களுக்கு வருவோமா னால், தேவன் நம்மிடம் கேட்கும் மாபெரும் வேலை நாம் மற்றவர்களுக்காக உழைப்பது அல்ல, ஆனால் நம்மி லுள்ள வேலையான சுயத்தை அடக்கி ஜெயித்து ஆளுகை செய்யும் வேலையையே அவர் நம்மிடம் கேட்கிறார் என்று காண்கிறோம். பரிசுத்தம் செய்தல் என்பது சுயத்திலிருந்தும், உலகத்திலிருந்தும் பிரிந்து தேவனுடைய ஊழியத்துக்காகத் தன்னை அர்ப்பணிப்பதைக் குறிக்கிறது. அதை முழுமையாகச் செய்யும்போது அது நமது பரம பிதாவின் குணத்துக்கு ஒப்பான குணத்தை நம்மில் விருத்தியடையச் செய்கிறது. அவருடைய பிள்ளைகள் தேவ சாயலான குணத்துக்குக் குறைவான குணவிருத்தியுள்ளவர் களாயிருப்பது தேவனுடைய சித்தமல்ல.




"அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக் குள்ளாகக் காத்துக்கொள்ளும்."- பிலி. 4:7.

கர்த்தர் தம்முடைய சித்தம் இன்னதென்று நமக்குத் தேவையான போதனைகளை அவருடைய வார்த்தையின் மூலமாக நமக்குக் கொடுக்கிறார். இந்தப் போதனைகள் நன்மையும் உண்மையுமான இருதயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கீழ்ப்படிதலின் கனியைக் கொடுக்கின்றது; அது ஆவியின் கனிகள் அபிவிருத்தியடைய வழிநடத்து கிறது. "**அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்.**" மாம்சத்துக்குரிய வாக்குவாதங் களிலிருந்து விலகி இருக்கும்படி தங்களுடைய செயல் பாடுகளைக் கட்டுப்படுத்த அநேக கிறிஸ்தவர்கள் கற்றறிந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர், யாக். 3:1-10-ல் சுட்டிக்காட்டுகிறபடி, தேவனைத் துதிக்கும் அதே நாவினால் உடன் சிருஷ்டிகளுக்கு தீங்கு விளைவிக்க முடியும் என்பதை ஞாபகத்தில் கொண்டு, அநேகர் தங்களுடைய நாவையும் குறிப்பிட்ட அளவில் கட்டுப்படுத்த கற்றறிந்திருக்கிறார்கள். மேலும் "**கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்: என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்**" என்று சங். 141:3-ல் வாசிக்கிறோம். ஆனால் மனதையும், சித்தத்தையும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாகக் கொண்டு வராதவரை நடத்தையையும் , வார்த்தையையும் கட்டுப்படுத்துவது கடினமானதாகும். தேவன் என்ன விரும்புகிறார் என்பதற்கான காரணத்தை நமக்குக் காட்டி, மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை நமக்கு முன்பாக வைக்கிறார். அவைகள் கர்த்தருக்குப் பிரியமானதை, கர்த்தருடைய சித்தத்தை நம்மில் கிரியை செய்யும் நோக்கில் அதாவது நம்முடைய மனங்களில் கிரியை செய்யவும், நம்முடைய வார்த்தைகள் மற்றும் செயல்களில் கிரியை செய்யவும் கொடுக்கப்பட்டுள்ளன. அப்போஸ்தலர், நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தில், நம்மையும், நம்முடைய சிந்தனைகளையும், நம்முடைய வார்த்தைகளையும், நம்முடைய நடத்தையையும் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரும் சரியான வழிமுறையை நமக்குச் சுட்டிக்காட்டுகிறார். ஒவ்வொரு சிந்தனையையும் எதிர்த்து கேள்வி கேட்க வேண்டும்! இந்த பாடத்தில் அப்போஸ்தலர் வைக்கிற பெரும்பாலும் அனைத்தையும் உள்ளடக்கிய கருத்திற்கு இசைவாக, எதிர்த்து தடையின்றி கேள்வி கேட்க நாம் கற்றறிந்து கொள்ளலாம். தீர்மானிப்பதற்காக (முடிவெடுப்பதற்கு) முதலில் அதிகமான நேரம் தேவைப்படலாம், ஆனால் போகப்போக கிட்டதட்ட உடனடியாகவே தீர்மானம் எடுக்கக்கூடும்.

(1) நம்முடைய மனதில் பரிசீலனை செய்ய நாடும் சிந்தனையானது கனத்துக்குரிய ஒன்றா? அப்படி யிருந்தால், அது அனுமதிக்கப்பட்டு மனதில் ஏற்றுக் கொள்ளப்படலாம். அப்படியில்லாதிருந்தால், அது தீமையின் செயல் விளைவாக (செல்வாக்காக) இருப்பதால் உடனடியாக எதிர்த்து மனதில் இருந்து துரத்தப்பட வேண்டும். (2) யோசனையாகக் கூறப்பட்ட சிந்தனையானது சிற்றின்பமல்லாத, சுயநலமல்லாத – சுத்தமானது தானா? என்ற இந்த பரீட்சைகளில் அது தேர்ச்சி பெற்றுவிட்டால் அது கூடுதலான பரிசீலனைக்கு அனுமதிக்கப்படலாம். அவைகளில் அதன் சுத்தம் நிரூபிக்கப்பட தவறினால், கேடு விளைவிக்கும் கொள்ளை நோய்க் கிருமிகளைக் கொண்ட

பொருள் நமது வீட்டிற்குள் வருவதுபோல அந்த சிந்தனையை எண்ணி உடனடியாக அதை எதிர்க்க வேண்டும். (3) அந்த சிந்தனையானது அன்பானதா? அது அன்பு கூருவதற்கு பொருத்தமான காரியங்கள்தானா? அன்பான செல்வாக்கை செயல் விளைவை அது தூண்டுகிறதா அல்லது கொஞ்சம் குறைய வெறுப்பு, ஆத்திரம், கோபம், வன்மம் உள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதா? அன்புள்ளதாயிருந்தால் அது அனுமதிக்கப்படலாம். அப்படியில்லாவிட்டால் நமக்கும் மற்றவர்களுக்கும் கேடுண்டாக்காமல் இருக்க, மேற் கொண்டு அது தொடர்ந்து செல்ல அனுமதிக்காமல் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும். (4) அது நற்கீர்த்தியுடையதா? உலகத்தால் மேன்மையாக பேசப் படுகிற காரியம் என்று இதை அர்த்தப்படுத்த முடியாது. ஏனெனில் அப்போஸ்தலன் தானும் நமது கர்த்தராகிய இயேசுவும் பலவித தீமையான மொழிகளையும் அவர்களுக்கு எதிராகப் பொய்யாகச் சொல்லிய உலகத் தாரால் நிந்திக்கப்பட்டார்கள். இந்த சிந்தனையோடு தொடர்புடைய எல்லா காரியங்களையும் நற்கீர்த்தியுள்ள ஜனங்கள் அறிந்து உணர்ந்து கொண்டிருந்தால், அவர்கள் அனைவராலும் மேன்மையாக எண்ணப்படுகிறவைகளே - நற்கீர்த்தியுள்ளவைகள் என்ற சொல்லுக்கு அர்த்தமாக இங்கே எடுக்கப்படவேண்டும். (5) அந்த சிந்தனையில் புண்ணியமானது அல்லது புகழ்ச்சிக்குரியது ஏதாவது இருக்கிறதா? அப்படியிருந்தால் அது அனுமதிக்கப்படலாம். அப்படி இல்லாவிட்டால், ஒரு வேளை அது குற்றமற்ற தாயிருந்தாலும் அல்லது குற்றமுள்ளதாயிருந்தாலும் அதன் நிராகரித்தலுக்கான ஒரு மதிப்பான காரண மில்லாதிருந்தாலும் அது விலக்கப்படவேண்டும். சாதாரண மாக கெட்ட காரியமாயில்லாதிருந்தாலும் நம்மிடம் அதற்கு நேரமோ இடமோ இல்லை.





"... அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்." - ஏசா. 30:15.

## உண்மையுள்ளவைகளெவைகளோ

எந்த காரியம் சம்பந்தமாகவும் கேட்க வேண்டிய முதல் கேள்வி என்னவாக இருக்க வேண்டும்? அது உண்மை யுள்ளதா அல்லது பொய்யானதா? அது பொய்யானதாக இருந்தால் அது எவ்வளவு அழகானதாயிருந்தாலும் அதனுடன் தேவனுடைய ஜனங்கள் செய்வதற்கு ஒன்று மில்லை. பரிசுத்தவான்களின் அஸ்திபாரம் சத்தியத்தில் அன்பாயிருப்பதாகும். மேலும் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கீகரியாமற்போனவர்கள் (பெற்றுக் கொள்ளா தவர்கள்) (2 தெச. 2:10) அநீதியில் பிரியப்படுகிறவர்களாகி இந்த அறுவடை காலத்தில் இடறலடைந்து தகுதி யற்றவர்களென தள்ளப்படுவார்கள் என்று நமது கர்த்தர் அப்போஸ்தலன் மூலம் அறிவித்ததை நாம் நினைவு கூர்வோமாக. நாம் "**தேவனுடைய கிருபையை விருதாவாகப் பெற**" முடியாது. (2 கொரி. 6:1). குறைபாடுள்ள, அபூரண மான நமது மூளைகள் முழு முயற்சியுடன் செயல்பட்டாலும் நாம் தவறாக நடத்தப்படும் பெரிய ஆபத்து இருக்கிறது. உண்மையில்லாதது என்று தெளிவாக நாம் உணருகிறவைகளை 'தொடவும்கூட கூடாது' என்று வலியுறுத்தி கர்த்தருடைய வசனம் நமது கவனத்தை ஈர்க்கிறது. இதன் பொருள் உண்மையற்றதிலிருந்து உண்மையுள்ளதைத் தெளிவாகப் பிரித்தறிய ஆதாரங் களை சீர்தூக்கி ஒப்பிட்டு பார்க்கக்கூடாது என்பதல்ல. ஆனால் உண்மையுள்ளது (சத்தியம்) என்று கண்டு கொண்ட உடனேயே அது நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் மற்றும் உண்மையில்லாததை (தப்பறை) தீவிரமாக மறுத்து, முற்றிலும் விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும். தப்பறை என்று கண்ட பிறகு தப்பறையைக் கையாளுவது அடிப்படை யிலேயே தவறான காரியம் என்று அறிந்தபோதும் 'எவ்வகையில், அதை நியாயப்படுத்தலாம் என்று பார்ப்பது' நமது ஆவிக்குரிய கால்களுக்கு கண்ணி வைப்பதாகும். இது ராஜ்யத்திற்குப் போகும் பயணிகளை அடிக்கடி வழியில் இடறச் செய்கிற ஒன்றாயிருக்கிறது. இந்த பாட தலைப்பு வசனத்தில் தேவன் அப்போஸ்தலன் மூலம் கொடுத்துள்ள புத்திமதிகளை நாம் பின்பற்றினால் புதினங்கள் (பொய்யான கட்டுக்கதைகள்), நாவல்கள் (கற்பனை கதைகள்) உண்மை யற்ற ஏமாற்றும் தன்மையுள்ளவைகள் போன்றவை களையும் நாம் விலக்க வேண்டும் என்று இது அர்த்தப்படுத்துகிறது. இது மற்றொரு விதத்தில் உண்மை யுள்ளவைகளிடத்தில் பயபக்தி அதிகரிப்பதையும், அவை களில் முழுமையான ஈடுபாடு அதிகரிப்பதையும், அவைகளை ஆராய்ந்து படிக்க அதிக நேரம் செலவிடுவதை-யும், அதன் பலனாக நம்முடைய இருதயங்களில் சத்திய ஆவி அதிகரிப்பதையும் அர்த்தப்படுத்துகிறது.

## ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ

ஒரு காரியத்தைப் பற்றிய உண்மையை அறிவது என்பது செய்யப்பட வேண்டிய சோதனைகளில் ஒன்று மாத்திரமே. அது ஒழுக்கமுள்ளதா? (நேர்மையுள்ளதா) என்றும் நாம் கேட்க வேண்டும். ஒரு காரியம் உண்மை யுள்ளதாயிருப்பதாக நாம் கண்டாலும், நாம் சிந்திப்பதற்கு அது தகுதியற்றதும், ஒழுக்கமற்றதாயும் இருப்பதை நாம் காண்கிறோம். ஒழுக்கமற்றதும், இழிவானதுமான சிந்தனை கள் உண்டென்றும், அவைகளை ஆழ்ந்து சிந்திப்பது விலையேறப்பெற்ற நேரத்தை வீணாக்குவது என்றும், அவைகள் மீது செலவிடப்பட்ட நேரத்திற்கு ஓர் வெகு மதியையும், ஓர் ஆசீர்வாதத்தையும் கொண்டு வருவதற்குப் பதிலாக நஷ்டத்தையும், தீங்கையும் அதன் காரணமாக நம் மனங்களில் இழிவான கறையையும் உடைமையாக விட்டுச் செல்கிறது என்பதையும் அறியாதவன் யார்? இது பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு தகுதியற்றதாயிருக்கிறது.





“கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்-களை உனக்கு அருள்செய்வார்.” - சங். 37:4.

தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக நாம் இந்த தகுதியற்ற சிந்தனைகளை நீக்குவது, நாம் விரும்பினால் அவ்வளவு அதிகமான நேரத்தை உண்மையுள்ள காரியங்களில் மட்டுமல்லாது அதோடுகூட ஒழுக்கமுள்ளதும் (நேர்மையுள்ளதும்), கவனிப்பதற்கு தகுதியானவைகளிலும் செலவிட சந்தர்ப்பமும், சக்தியும் அளிக்கிறது! இழிவான காரியங்களில் கவனம் செலுத்துவது, அவைகளை ஆழ்ந்து சிந்திப்பது நமக்குப் பாதகமாகவே இருக்கும். மேலும் எவ்வளவு சீக்கிரமாக அந்தக் காரியத்தைக் கண்டறிந்து அவைகளை நீக்குகிறோமோ அதற்குத் தக்கதாக, நம்முடைய இருதயங்கள் மேம்பட்டதாகவும், சந்தோஷமும் அதிக ஒழுக்கமும் உள்ளதாகவும் இருக்கும். நம்முடைய மனங்கள் உண்மையும், ஒழுக்கமுமுள்ள நீதியான காரியங்களை சிந்தித்துக் கொண்டிருக்கும்படி நிரப்பப்பட்டிருக்க வேண்டும். உலகமெங்கும் மிக அதிகமாக அசுத்தங்கள் இருக்கின்றன. ஆதலின் கர்த்தருடைய பிரதிஷ்டை செய்த ஜனங்கள் அப்போஸ்தலனுடைய கட்டளையை பின்பற்றி பெரும் முயற்சியுடன் அசுத்தங்களை கவனமாக நீக்காவிட்டால் முடிவாக அவைகள் நம்மை தீட்டாக்கிவிடும் என்பதை உணர்ந்தவர்களாக நமது இருதயங்களுக்குள்ளும், சிந்தைகளுக்குள்ளும் அவைகள் நுழையாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

## நீதியுள்ளவைகளெவைகளோ

நீதியுள்ளவைகள் எவைகள் என்பனவற்றுடன் நமது ஆராய்ச்சியைத் தொடருவோம்! தங்கப் பிரமாணம் என்பது அன்பின் பிரமாணமல்ல, அது நீதியின் பிரமாணம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்! நமது மனங்கள் (சிந்தைகள்) நீதியுள்ளவைகளை அல்லது நியாயமான காரியங்கள், கோட்பாடுகள் போன்றவைகளை சிந்திப்பதில் முழுவதுமாக ஈடுபட்டிருக்க வேண்டும். உண்மையான அல்லது கற்பனையான மனக்குறைகளையும், அநீதியானவைகளையும் நாம் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கக்கூடாது. அதற்கு மாறாக வேத வசனங்கள் “இப்பொழுதிருக்கிற பொல்லாத உலகம்” என்று பெயரிட்டழைக்கிற காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும், நீதி மேலோங்கி இருக்குமானால் காரியங்கள் இவ்வாறு இருக்காது என்பதையும் நினைவுகூர வேண்டும். இருந்தபோதிலும் நீதியினிமித்தம் அநீதியைச் சகிக்கவும், நன்மை செய்யவும், கர்த்தருக்கும் அவருடைய வார்த்தைக்கும் ஊழியஞ்செய்வதில் நமது ஜீவனைக் கொடுக்கவும், தூஷிக்கப்படவும், தவறாகப் புரிந்து கொள்ளப்படவும், கிறிஸ்துவினிமித்தம் பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்லுவார்கள் என்பதையும் அதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும்.




“எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.” - நீதி. 4:23.

தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளுக்குரிய காரியங்களில் ஒன்று அனுதினமும் நீதியை மிக அருகில் கிட்டிச் சேர்வதற்கு அவர்களால் இயன்ற மட்டும் அதிக நீதியுள்ள-வர்களாக, மேலும் மேலும் அதிக நீதியுள்ளவர்களாக ஆக வேண்டும். நாம் நம்-முடைய இருதயங்களில் முழு நிறைவாக நீதியுடையவர்களாகாவிட்டால், நீதியின் இந்தக் கோட்பாட்டின் மதிப் புணர்ந்து அதை மகிழ்ச்சியுடன் பயிற்சி செய்யாவிட்டால் ராஜ்யத்திற்கு நாம் தகுதியுள்ளவர்களாக இருக்க மாட்டோம். ஒரு மிருகத்திடம்கூட நாம் அநீதியாக நடந்து கொள்ளக் கூடாது. ஒவ்வொரு சிருஷ்டிக்கும் அதனுடைய உரிமைகள் உண்டு. ஒவ்வொரு சிருஷ்டிக்கும் அதற்குரிய உரிமைகளை நாம் கொடுக்க வேண்டும். இவைகளை நாம் செய்யும்போது தேவன் தம்மிடத்தில் உண்மையுள்ளவர்களுக்காக வைத்-திருக்கிற மகிமையான நிலைமைக்கு நம்முடைய மனங்களையும் இருதயங்களையும் ஆயத்தம் செய்கிறவர்களாயிருப்போம்.

தேவனுடைய ராஜ்யத்தின் மாபெரும் சிலாக்கியங்கள் இரக்கம் அல்லது தயவின் அடிப்படையில் கொடுக்கப்படுவதில்லை. பரலோகத்திலிருந்து வருகிற ஈவான எந்த வெகுமதிக்கும் இரக்கமோ அல்லது தயவோ சம்பந்தப்பட்டிருக்காது. நாம் போராடிக் கொண்டிருக்கிற நம்முடைய பாவங்கள் மற்றும் பலவீனங்கள் சம்பந்தமாக யேகோவா தேவன் இரக்கம் காண்பிக்கிறார்; ஆனால் தகுதியற்ற குணாம்சமுள்ள தனிப்பட்ட ஒருவனையும் அவர் தம்முடைய ராஜ்யத்தில் அனுமதிக்கமாட்டார். அவர் அங்கீகரிக்கிறவர்கள் அனைவரும் நீதியின் கோட்பாடுகளுக்கு பிரதிநிதியாயிருக்க வேண்டும். மேலும் அந்த கோட்பாடுகளை தற்காலத்தில் எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என்பதையும் அறிந்திருக்க வேண்டும். அநீதி செய்வதைவிட, இழப்பை சகித்துக் கொள்ளும் அளவிற்கு நீதியைச் செய்ய மனதில்லாதிருக்கிறவர்கள் இராஜ்ஜியத்தில் பங்கு பெறமாட்டார்கள். வேதாகமம் எல்லா இடத்திலும் தேவனை நீதியின் மிக உயர்ந்த பிரதிநிதியாக சித்தரிக்கிறது. நாம் தேவனுடைய உண்மையான பக்தி விசுவாசமுள்ள பிள்ளைகளாயிருந்தால் அவரை நம்முடைய முன்னுதாரணமாக உபயோகிப்போம்.


## கற்புள்ளவைகளெவைகளோ

உலகம் முழுவதும் எவ்விடத்திலும் பெரிய அளவில் அசுத்தம் காணப்படுகிறது. எனவே கர்த்தருடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகள், அப்போஸ்தலருடைய இந்த கட்டளைக்கு கீழ்ப்படிந்து அசுத்தங்களை பெரும் முயற்சி யுடன் கவனமாக நீக்கவும், அவைகள் பெரிய அளவிலோ அல்லது சிறிய அளவிலோ தீட்டுப்படுத்தலாம் என்ற மாபெரும் ஆபத்தில் இருப்பதை உணர்ந்தவர்களாய், நம்முடைய இருதயங்களிலும் சிந்தனைகளிலும் அவைகள் நுழையாதபடி பார்த்துக் கொள்ளவதும் அவசியமாயிருக் கிறது. கற்புள்ள (pure-சுத்தமான) சிந்தனையை பேணுகிறவர்களுக்கு, ஒப்பிடும்போது கற்புள்ள வார்த்தை மற்றும் கிரியையை பேணுவதற்கு குறைந்த அளவு முயற்சியே போதுமானதாயிருக்கிறது. அசுத்தமானது ஒரு திசையிலோ அல்லது மற்றொரு திசையிலிருந்தோ வந்தாலும், அதாவது உலகம் அல்லது மாம்சம் அல்லது பிசாசிடமிருந்து வந்தாலும்; முதலாவது அது மனதைத் (சிந்தையை) தான் தாக்குகிறது. அங்கேயே அது தடுத்து நீக்கப்பட்டால் வெற்றியானது பெறப்படுகிறது. தடுத்து நீக்கப்படாவிட்டால், விளைவு என்னவாக இருக்கும் என்பதை நாம் அறிய முடியாது; அப்போஸ்தலனாகிய யாக்கோபு அறிவிக்கிறபடி: ''**இச்சையானது** (எந்த விதமான சுயநலமான விருப்பமும்) (மனதில்) **கர்ப்பம் தரித்து பாவத்தை பிறப்பிக்கும்** (பாவமான வார்த்தைகள் அல்லது கிரியைகளை அபிவிருத்தி செய்யும்); **பாவம் பூரணமாகும் போது, மரணத்தைப் பிறப்பிக்கும்.**'' (யாக். 1:15).

எனவே, நம்முடைய சிந்தனைகளை கற்புள்ளவை களின் (சுத்தமுள்ளவைகளின்) வழியில் காத்துக் கொள்ளப்பட வேண்டியதின் அவசியத்தை அப்போஸ்தலர் குறிப்பிடுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. மேலும் ஒரு காரியமானது மிகவும் உண்மையுள்ளதென்று உறுதிப் படுத்தப்பட்டிருந்தாலும், அநீதியோடு சம்பந்தப் படாததாயிருந்தாலும், ஒழுக்கமற்றதாய் இல்லாதிருந்தாலும் கூட, அது கற்பற்றதாயிருந்தால் (அசுத்தமானதாயிருந்தால்) பிரதிஷ்டை செய்த ஆண்டவருடைய ஜனங்களின் மனதிற்கு அது தகுதியற்றது என கண்டனம் செய்ய இதுவே மிகவும் போதுமானதாகும். மனதில் நுழையும் எந்த அழுக்கும் அல்லது அசுத்தமும் ஏற்படுத்தும் அசுத்தகறையை முழுமையாக அழித்தொழிக்கும் வேதனையை, அந்த வேளையில் மாத்திரமல்லாமல், அதன்பிறகு பல மாதங்கள் அல்லது வருடங்களுக்கு கொடுக்கிறது என்பதை நாம் கவனிக்க தவறி விடக் கூடாது.

நம்முடைய இருதயத்தில் இருக்கும் சுத்தமான கிறிஸ்தவ அன்பு யாரையும் மாம்சத்தின்படி அறியாது. மேலும் மாம்சத்தின் மீது யாதொரு நம்பிக்கையையும் வைக்காது; அது பழைய சுபாவத்தின் இயற்கையான சீர்கேட்டினை உணர்ந்து, மாம்சத்தை புதிய சுபாவத்தின் குதிங்காலின் கீழ் வைக்கிறது. அதன் பலனாக, அதின் தன்மையானது தகாத நெருங்கிய பழக்கத்திற்கு நேர் எதிராயிருக்கிறது. அது கண்ணியமானதும், எளிமை யானதும் கற்புள்ளதுமாயிருக்கிறது, மேலும் எதிர்பாலினத் தவரிடம் இந்த உலகத்தாலுங்கூட ஏற்றுக் கொள்ளப்பட்ட சரியான உறவை பேணுகிறது. அவ்வாறே அதிகமதிகமாய் பரிசுத்தவான்களாக்குகிறது. ரோம. 12:10-ல் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்ற விதத்தின்படி பரிசுத்தவான்களின் மத்தியில் அன்பின் வெளிப்பாடு இருக்க வேண்டும். ''**சகோதர சிநேகத்திலே ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள், கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக் கொள்ளுங்கள்.**'' மேலும் இப்படிப்பட்ட அன்பினால் (kindness) மிகவும் சுத்திகரிக்கப்பட்ட தன்னடக்கம் மற்றும் கற்புடன் முற்றிலும் இணக்கமாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட உயர்தரமுள்ள மனமும் இருதயமும் உடையவர்களாக, தங்களுடைய நம்பகமான விஷயங்கள் மற்றும் நெருங்கிய உறவை சகோதரிகள் தங்களுடைய புருஷர்களுடனும் அல்லது சகோதரிகளோடும், சகோதரர்கள் தங்களுடைய மனைவிகளோடும் அல்லது உடன் சகோதரர்களோடும் கிறிஸ்துவின் காரியத்துக்கு யாதொரு நிந்தையையும் கொண்டு வராமல் பரிமாற்றம் செய்து கொள்ள விரும்புவார்கள்.

தீமோத்தேயுவுக்கு எழுதின தன்னுடைய நிருபத்தில், (1 தீமோ. 5:1-3), பரிசுத்தவான்கள் மத்தியிலுள்ள இந்த சுத்தமான அன்பின் தன்மையை, மனநிலையை அப்போஸ்தலர் திரும்பவும் சுட்டிக்காட்டி கூறுகிறார். ''**முதிர்வயதுள்ளவனைக் கடிந்துகொள்ளாமல்** (ஓர் வயது முதிர்ந்த சகோதரன், ஒரு வேளை தவறு செய்திருந்தாலும் கூட, அவருடைய வயதுக்கு மரியாதை கொடுக்கவும்), **அவனைத் தகப்பனைப் போலவும்: பாலிய புருஷரைச் சகோதரரைப் போலவும்: முதிர் வயதுள்ள ஸ்திரீகளை தாய்களைப் போலவும்: பாலிய ஸ்திரீகளை எல்லா கற்புடன்** (தகாத நெருங்கிய பழக்கத்தின் சாயல்கூட இல்லாமல்) **சகோதரிகளைப் போலவும் பாவித்து, புத்தி சொல்லு. உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம் பண்ணு**'' - அவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கையும் அந்த நம்பிக்கையில் உறுதியாக இருக்கும் நடத்தையும் உடையவர்களாய் இருக்கிறவர்கள். ''**பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லா வற்றையும் விட்டு விலகுங்கள்.**'' கவனமற்ற அல்லது விவேகமற்ற எந்த நடத்தையினாலும், ''**உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்:**'' அவ்வாறே நடந்து கொள்ளுங்கள். (1 தெச. 5:22; ரோம. 14:16); ஆம், கிறிஸ்துவின் சாயலை தங்களிடத்தில் அபிவிருத்தி யடையச்செய்ய தீவிரமாக முயற்சிக்கிறவர்கள் எல்லாராலும் கவனமாக ஆழ்ந்து தியானிக்க இந்த சிந்தனைகள் தகுதியானவை; முதலாவதாக சிந்தனைகளின் இயல்பை யும், இரண்டாவது நம்முடைய சிந்தனைகள் மற்றவரிடத்தில் ஏற்படுத்தும் (செல்வாக்கையும்) செயல் விளைவையும் நாம் ஆழ்ந்து சிந்திக்கக்கடவோம்; இருதயத்தை சுத்திகரிப்பதி னாலும், ஜெபத்தினாலும், பரிசுத்தமான சிந்தனைகளினால் மனதை நிரப்பி பாதுகாத்து வைத்திருப்பதினாலும் பொல்லாத சிந்தனைகள் மற்றும் தீமையான பேச்சுக்களையும் நாம் வெற்றிகொள்கிறோம்.




**உறுதியான கன்மலையாகிய கிறிஸ்துவில் நான் நிற்கிறேன்**

## அன்புள்ளவைகளெவைகளோ

‘‘**பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்**’’ (சங். 50:5) என்ற தெய்வீக அழைப்பை மனதில் கொண்டிருப்போமாக. பரிசுத்தவான்கள் சாந்தமுள்ளவர்களாகவும் அதனோடுகூட சமாதானம் பண்ணுகிறவர்களாகவும் இருக்கும்படி புத்திகூறப்பட்டுள்ளது. ஆனால் அவ்வண்ணமாக இருப்பதற்கு மனதிற்கு இனிய சிந்தனைகளையும் அன்பான மற்றும் அன்பு செலுத்தக் கூடிய சிந்தனைகளையும், பரிவான சிந்தனைகளையும், நற்குணமான சிந்தனைகளையும் அவர்கள் கொண்டிருக்க வேண்டும். அதன் விளைவாக அவைகள் குணாம்ச கிருபைகளாகப் படிப்படியாக அபிவிருத்தியடையும் கோபம், வெறுப்பு, பகைமை, எரிச்சலைப் பிறப்பிக்கிற சிந்தனைகள், சண்டையிடுகிற சிந்தனைகள், பழிக்கு பழிவாங்குகிறதும், சச்சரவு செய்கிறதுமான சிந்தனைகளை நாம் சிந்திக்கக் கூடாது. இவைகள் எல்லாம் முழுவதும் அபிவிருத்தியடைந்த பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கு சத்துருக்களாக கருதப்பட்டு வெறுத்து விலக்கப்பட வேண்டும். இவைகளுக்கு பதிலாக நம்முடைய அயலகத்தார், நம்முடைய நண்பர்கள் சம்பந்தமாக நாம் அறியக்கூடிய அழகான காரியங்களையும், மனதிற்கினிய காரியங்களையும் சிந்திக்க வேண்டும். அவர்களுடைய அநீதிகள் அல்லது தீமையான செயல்களுக்கெதிராக நம்முடைய கண்களை முழுமையாக மூட இயலாவிட்டாலும், மனதிற்கு இனிமையானதல்லாததும் சண்டையிடுகிறதுமான மன நிலைகளை நம்மிடம் வளரச் செய்யும் அவர்களுடைய பலவீனங்களைக் குறித்து சிந்தித்து விலைமதிப்புள்ள நேரத்தை வீணடிப்பதை குறைந்தபட்சம் தவிர்க்கலாம்.

தேவனுடையதும், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவினுடையதும், மற்றும் இயேசுவின் சீஷர்களுடையதுமான பூரண குணநலத்தின் அன்பான தன்மை பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளுக்கு சத்தியத்தின் அன்பான பூரணங்களைப் பற்றி கற்பிக்கிறது. பரிசுத்தமான காரியங்களை நாம் சிந்திக்கும் பொழுது, அவசியத்தின் பொருட்டு நம்முடைய மனதின் பார்வையை முடிந்த அளவு உயர்வான நிலைக்கு உயர்த்தி நம்மால் முடிந்த அளவு நெருக்கமாகச் சேர்ந்து, நமது தேவனுடையதும், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவினுடையதுமான பூரண குணநலத்தின் அன்பான தன்மையையும், அதற்கு இசைவு பொருத்தமாக இயேசுவின் அடிச்சுவட்டில் நெருக்கமாக நடக்கும் அவருடைய சீஷர்களில் ஒருவர் அல்லது மற்றொருவரிடம் இந்த அன்பின் தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளதையும் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். கர்த்தரிடத்திலும், சத்தியத்திலும் உள்ள அன்பானவைகளின் பூரணத்தை அடிக்கடி நினைவு கூருகிறதும், அவைகளால் முழுவதும் நிரம்பியிருக்கிறதுமான மனமானது கர்த்தருடைய ஆவிக்கு எதிரிடையான அன்பற்றதும், பரிசுத்தமற்றதுமான காரியங்களுக்கு எதிராக அவைகள் நுழைந்துவிடாதபடி மிக அதிக அளவு பாதுகாக்கப்பட்டுள்ளது. நம்முடைய மனங்கள் புதிதாக்கப்படுவதினால் நாம் அதிகமதிகமாக மறுரூபமாக்கப்பட்டு, ‘‘**நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே**’’ என்று கர்த்தர் சொல்லுவதை கேட்க அதிகமதிகமாக நெருங்கி கிட்டிச் சேருவோமாக.

தேவனுடைய ஸ்தானாபதிகளாக அவருடைய பார்வையில் அன்பானவர்களாக காணப்பட விரும்பும் நோக்கமானது, நம்முடைய நடத்தையும் வார்த்தைகளும் அவ்வண்ணமே ஜீவனுள்ள நிருபங்களாக அங்கீகரிக்கப்பட்டு, சகோதரர்களும் உலகத்தாரும் நன்மையடைவதற்காக நம்மைப் பார்த்து கற்றுக் கொள்ளும் விதத்தில் இருக்க நம்மை விரும்பச்செய்யும். இவைகளைச் செய்தால், ‘‘**அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்**’’ (பிலி. 4:9) என்று அப்போஸ்தலர் சேர்த்துக் குறிப்பிடுவதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை. எனவே அவர் அப்போஸ்தலர்களுடன் இருந்த வண்ணமாக, அதேவிதமாக இயேசுவின் அடிச்சுவடுகளில் நடந்து கொண்டிருக்கும் மற்ற எல்லாருடனும் நிச்சயமாக அவர் இருப்பார்.

## நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ

இந்த உலகமானது ஒளியையும் வெளிச்சத்தின் பிள்ளைகளையும் வெறுத்து அக்கிரமத்திலும் மற்றவர்களை சாதகமாகப் பயன்படுத்துவதிலும் மகிழ்ச்சியடைவதால், உலகத்தில் நற்கீர்த்தியுள்ளவைகள், பரிசுத்தமான காரியங்களாகவும் தேவனுடைய ஜனங்கள் சிந்திப்பதற்கு தகுதியானதாகவும் இருக்காது என்று சிலரால் தர்க்கிக்கப்படலாம். ஆனால் அப்படியல்லவென்று நாங்கள் பதிலளிக்கிறோம். குறிப்பிட்ட அளவிலான நியாயமான ஒழுக்கத்தரத்தை உலகம் அங்கீகரித்திருக்கிறது. அதை கடைப்பிடிக்காவிட்டாலும் பாவனையாகக்கூட அதன்படி செய்யாவிட்டாலும், அந்த தரத்தை அடைவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறவர்களாக அது காண்கிறவர்களை வெறுத்தாலும், வெளிச்சத்தின் பிள்ளைகளை மாயக்காரர்கள் என்று அது அழைத்து நமது கர்த்தருடைய காரியத்தில் நடந்ததை போல் அவர்களை சிலுவையிலறைந்தாலும் அந்த நியாயமான ஒழுக்கத் தரத்தை இந்த உலகம் அங்கீகரிக்கிறது. கொள்கையும், பொய்யான மதமுமே பொதுவாக மதரீதியான துன்புறுத்தல்களை தூண்டுகிறது. இருப்பினும் நற்கீர்த்தியுள்ள தரத்தை ஒருவன்

கடைப்பிடித்து அந்தக் காரியங்களை சிந்தித்தால் அதில் ஒரு ஆசீர்வாதத்தைக் கண்டடைவான். ஒருவன் நம்முடைய எஜமானரின் சீஷனாக (அவரிடத்தில் கற்றுக் கொள்ளும் மாணவனாக) ஆக விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும் என்று அவர் எப்படி கூறினார் என்பதை நினைவு கூருங்கள். துர்க்கீர்த்தியிலும் நற்கீர்த்தியின் மத்தியிலும் அவரைப் பின்பற்ற எவ்வாறு வாக்களித் திருக்கிறீர்கள் என்பதை நினைவு கூருங்கள். மேலும் உபத்திரவ காலத்தில் எப்போதும் உடனிருக்கிற உதவியாக அவர் இருக்கிறார் என்பதையும் நினைவு கூருங்கள், "**நல்ல போர்ச்சேவகனாக தீங்கனுபவிக்க**" (2 தீமோத். 2:3) தகுதி யுள்ளவனாக ஆகும்படியாக உதவுகிறார் என்பதையும் நினைவுகூருங்கள்.

யுக மாறுதலின் இந்த இடைக்காலத்தில், ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதிருப்பதால், தேவனுடைய வார்த்தையின் ஆழமான காரியங்களை, இன்றைய பிரதிஷ்டை செய்த ஊழியக்காரர்கள் காண முடியாது என்று சிலர் மறுக்கிறார்கள். 'வேத வாக்கியங்கள் எல்லா காலங்களிலும் காலத்திற்கு ஏற்ற சத்தியங்களை எல்லா பிரதிஷ்டையாளர்களுக்காகவும் போதிக்கிறது' என்று இதற்கு நாங்கள் பதிலளிக்கிறோம். எனவே பழைய ஏற்பாட்டு காலங்களில் மூப்பரான பாத்திரவான்கள் அவர்களுடைய காலத்திற்கு ஏற்ற எல்லா சத்தியங்களையும் பெற்றார்கள். கிறிஸ்துவின் ஆயிரவருட யுக மத்தியஸ்த ஆளுகையில், ஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதல் இல்லாமலேயே, பாத்திரவான்களும், பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக் காரர்களும் இழந்து போனதைத் திரும்பப்பெறும் வகுப்பாரும் வேதாகமத்தின் எல்லா காரியங்களையும் முடிவில் புரிந்துக்கொள்வார்கள். (ஏசா. 11:9; 29:18,24; 35:5; எரே. 31:34). ஏன்? ஏனெனில் 'தங்களுடைய காலத்திற்கு ஏற்ற சத்தியங்களை காண்பது பிரதிஷ்டையாளர் களுடைய சிலாக்கியமாக எப்போதும் இருக்கிறது.'

"**தேவனுடைய ஆழங்களை**" ஆவியினால் ஜெனிப் பிக்கப்படாதவர்கள் புரிந்துக் கொள்ள இயலும் என்பதை மறுக்கும் 1 கொரி. 2:9-16-லுள்ள அப்போஸ்தலர் பவுலுடைய வார்த்தைகளை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். இந்த வசனங்கள் பரம அழைப்புக்கான பொதுவான அழைப்பு திறக்கப்பட்டிருந்த காலத்துக்கு (கி.பி. 36-1881) மட்டுமே பொருந்தும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் காலகட்டத்தில் ஆவியினால் ஜெனிப் பிக்கப்படுதலும், பிரதிஷ்டை செய்தலும் ஒரே காரியத்தையே அர்த்தப்படுத்தின. எனவே எல்லா பிரதிஷ்டையாளர்களும் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாயிருந்தார்கள், பரம அழைப்புக்கான அழைப்பு திறக்கப்பட்டிருந்த காலத்திற்கு முன்னதாக அது இவ்வண்ணமாக இல்லை. எனவே பரம அழைப்பு முடிந்த பிறகு, அதற்கு பொருத்தமான பவுலுடைய இந்த வார்த்தைகள், எல்லா காலத்துக்கும் பொருந்தாது. அனால் எப்போதுமே பொருந்தும் சட்டம் என்னவெனில், 'பிரதிஷ்டை செய்தவர்கள் மட்டுமே காலத்திற்கேற்ற சத்தியத்தை (அறிந்து கொள்ள) காண முடியும்.' ஆகையால் "யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்தவர்கள்" - தேவனுடைய சிநேகிதர்களும், ஊழியக்காரர்களும், எதிர் காலத்தில் குமாரர்களாக ஆக எதிர்பார்த்திருப்பவர்களும் அதற்கு சாட்சியாக, ஆழமான காரியங்களின் காலத்துக் கேற்ற சத்தியத்தை பெற்றிருக்கிறார்கள்.

மூப்பரான பாத்திரவான்களைப் போலவே, பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்களும் குறிப்பாக சேபா ராஜஸ்திரீ வகுப்பாரும் ராஜ்யத்தின் சத்திய செய்தியை பரப்பும் ஊழிய வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறார்கள். (மத். 21:28; ரோம. 12:1; கால. 6:9,10). மூப்பரான பாத்திரவான்கள் பெற்றிருந்ததை விட, அபிவிருத்திக்காக, மிக அதிக அனுகூலம் பெற்றிருந்தாலும், மூப்பரான பாத்திரவான் களைப் போலவே (எபி 11: 33), ஆவியின் சாட்சியாக (ரோம. 8:9; 2 பேது. 1:5-11; 1 யோவா. 2:5,6; 3:14,16,17) தேவனுடைய சாயலில் வளரும் வளர்ச்சியை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

மூப்பரான பாத்திரவான்களைப் போலவே, "யுகங்களுக்கிடையே பிரதிஷ்டை செய்தவர்களும்," ஆயிர வருட யுக மத்தியஸ்த ஆளுகையில் அவர்களுடைய ஸ்தானத்திற்கு தகுதிபடுத்துவதற்காக சோதிக்கப்பட்டு, பரீட்சிக்கப்படுகிறார்கள். நிறைவேறுதலான கெர்சோனிய லேவியர்களான வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் மீதமுள்ள பிரதிஷ்டை செய்தவர்களான நிறைவேறுதலான நிதனீமியர்கள் (லேவியர்களின் ஊழியக்காரர்கள் - எஸ்றா 8:20), ஆகிய இரண்டு வகுப்பார் சம்பந்தமாகவும் இது உண்மையாக இருக்கிறது. மேலும், இவர்கள் தேவனுடைய சிநேகிதர்களாக, ஊழியக்காரர்களாக, எதிர்கால குமாரர்களாக ஆக எதிர் பார்த்திருப்பவர் களாகவும் இருப்பதால் மூப்பரான பாத்திரவான்களைப் போலவே, இவர்களும் நற்சாட்சியை, ஆவியின் அச்சாரம் அல்லது சாட்சியாகிய சத்தியத்தைப் பெறுகிறார்கள். (ரோ. 8:16; see E.15, chap-10). இதில் நாம் மகிழ்ச்சியடை வோமாக. மேலும் தேவனுடைய ஆவியினால் ஜெனிப் பிக்கப்படாத அர்ப்பணிப்புள்ள ஊழியக்காரர்கள் பரிசுத்த ஆவியையும் பரிசுத்த ஆவியின் சாட்சியையும் பெறுகிறதில்லை என்று யாரையும் நம்மிடம் சொல்ல அனுமதிக்காமலும் இருப்போமாக. பிரயோஜனமாக இருக்கக் கூடிய காரியங்களையே நாம் ஆராய்ந்து பார்ப்போமாக. "**நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய்**




"நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" - எபி. 12:1.

**நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்: நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லி யிருக்கிறாரே.**'' (எபி. 13:5).

## புண்ணியம் எதுவோ

ஏதாவது புண்ணியம் அல்லது மதிப்புள்ள காரியங் களையும், எந்த அளவிலாவது மெச்சத்தக்கதான காரியங்களையும் – ஒருவருடைய சிறந்த (உயர் பண்புடைய) வார்த்தைகள் அல்லது சிறந்த செயல்கள் அல்லது சிறந்த கருத்துக்கள் ஆகியவை சம்பந்தமாக நாம் நம்முடைய பாடத்தைத் தொடருவோம். அவைகளை நாம் தீங்கின்றி தியானிக்கலாம். அதன் பலனாக நமது புது மனமும், இருதயமும், சிந்தையும் போஷிக்கப்பட்ட அந்த மாதிரியில் வளர்வதைக் காண்கிறோம். நமது மனம் புதிதாகிறதினால் அதிகமதிகமாக நாம் மறுரூபமாக்கப்படுவோம். இந்த ஜீவியத்தில் அணுவணுவாக, படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக நாம் மகிமையின்மேல் மகிமையடைந்து நமது கர்த்தரும், எஜமானருமானவரின் மகிமை பொருந்திய மாதிரியைக் (ரூபத்தை) கிட்டிச்சேருவோம். நமது எண்ணங்கள் இவ்வித நிலைமையிலிருந்து, கர்த்தருடன் நமக்குள்ள ஐக்கியத்தை நாம் காத்துக் கொண்டால், கர்த்தருடைய சாயலிலும் மாதிரியிலும் (ரூபத்திலும்) நம்மை பூரணமாகச் செய்யும், நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்களாயிருப்போம். (PT' 73, p.61).

*என்னுடைய துக்கம் தீர்மானமாகவும், என்னுடைய பயம் தைரியமாகவும், என்னுடைய உதவியற்ற நிலை செயல்பாடாகவும் மாறும்படி ஜெபிக்கிறேன்.*

புண்ணியம் என்பது நீதியின் கிருபைகளைக் காட்டுகிறது. புகழ் என்பது அன்பின் கிருபைகளைக் காட்டுகிறது. மனமானது சிந்தித்துப்பார்க்கக் கடமைப் பட்டிருப்பதால், நல்ல எண்ணங்களையும், குணங் களையும், புண்ணியத்தையும், புகழையும் தியானித்துக் கொண்டிருப்பது எவ்வளவு சிறப்புடையதாகும். பொருட் களைப் பற்றிய சிந்தனை தாழ்ந்த நிலையுள்ளதாகும். மனிதர்களைப் பற்றிய சிந்தனை அதைவிட உயர்வான தாகும். ஆனால் சிறந்த எண்ணங்களையும், குணங் களையும் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பது மிக உயர்வானதாகும். ஏனெனில், விசேஷமாக அவை தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும், பரிசுத்தவான் களிடத்திலும் நிலைத்திருக்கிறபடி அவற்றைச் சிந்தித்துக் கொண்டிருப்பது மிக உயர்வானதாகும், அவர்களைப் போன்றவர்களாவதற்கு இதுவே சிறந்த வழியாகும். (மார்ச் 5 மன்னா).


நாம் நம்மை நாமே சோதித்து, நம்முடைய மனதில் எண்ணிப்பார்க்க நாடும் சிந்தனையானது கனத்திற்குரிய ஒன்றா? என்று கேட்க வேண்டும்; கனத்திற்குரியதாயிருந் தால், அது அனுமதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படலாம், அப்படியில்லாதிருந்தால் தீமையின் செல்வாக்காக, எதிராளியாக, உடனடியாக கடிந்துக் கொள்ளப்பட்டு, மனதில் இருந்து தூக்கி எறியப்படவேண்டும். பரிந்துரைக்கப்பட்ட சிந்தனையானது சிற்றின்ப இச்சையில்லாததும், சுயநல மில்லாததுமான கற்புள்ள ஒன்றா? அப்படியிருந்தால், இந்த சோதனைகளை அது கடந்தால், கூடுதலான பரிசீலனைக்கு அனுமதிக்கப்படலாம். இவைகள் மூலம் கற்புள்ளதென்பதை (பரிசுத்தத்தை) நீருபிக்க அது தவறுமாயின், பெருந்தீங்கு விளைவிக்கும் கொள்ளை நோய்க் கிருமிகளால் பாதிக்கப்பட்ட பொருட்கள் நம்முடைய வீட்டுக்குள் நுழைந்தது போல அந்த சிந்தனை இருப்பதால் உடனடியாக அது கடிந்து கொள்ளப்பட்டு நீக்கப்பட வேண்டும். அந்த சிந்தனையில் புண்ணியமுள்ளது ஏதுமிருக்கிறதா? புகழப்படத்தக்க வைகள் என்ற கருத்தில் ஏதாவது இருக்கிறதா? அப்படியிருந்தால், அது அனுமதிக்கப்படலாம். அப்படி யில்லாவிட்டால், ஒரு வேளை குற்றமற்றதாயிருந்தாலும், அது ஆகாததென்று தள்ளப்பட வேண்டும். அதற்கு மதிப்பு எதுவும் இல்லாததே அது தள்ளப்பட்டதற்கு காரண மாயிருக்கிறது. நன்மைக்காக ஒரு உறுதியான மாற்றத்தை ஏற்படுத்துவதும் ஏதாவது வகையில் உதவிபுரிவதும், பயனுள்ளதாயிருப்பதுமான காரியங்களையே நம்முடைய இருதயங்களிலும் நம்முடைய மனங்களிலும் பெற்றிருக்க நாம் விரும்புகிறோம். இல்லாவிடில், நம்முடைய இருதயங் களுக்கும் மனங்களுக்கும் அந்த சிந்தனையானது கூடுதலான சுமையாக பிரயோஜனமற்றதாக இருப்பதால் அது நீக்கப்பட வேண்டும். நம்முடைய இருதயங்களுக்கும் மனங்களுக்கும் நன்மைதரக்கூடிய காரியங்களே தேவைப்படுகின்றன.

இயல்பாக நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும், தெய்வீக வார்த்தையின் போதனைகளை பின்பற்றும் தேவனுடைய ஜனங்கள் நிச்சயமாகவே மிகவும் உயர்ந்த பண்புடைய ஜனங்களாகவும், உதவி செய்யும் ஜனங் களாகவும், தெளிந்த புத்தியுள்ள ஆவியை உடையவர்களாக வும் ஆகிறார்கள். இந்தக் காரியங்கள் ராஜ்யத்திற்காகவும், தேவனுடைய ஊழியக்காரர்களாக அவர்களுடைய மீட்பர் மற்றும் தலைவரின் கீழ் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்படும் மாபெரும் எதிர்கால வேலைக்காகவும், அவர்களைத் தகுதிபடுத்தும் ஒரு அவசியமான பகுதியாக இருக்கும். வர இருக்கும் ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதிக்காகவும் அதில் நம்முடைய பங்கிற்காகவும் நாம் ஆயத்தமாகும் விதமாக, நாம் அறிவொழுக்கப் பயிற்சிபெற்றவர்களாகவும், கற்று ணர்ந்தவர்களாகவும், பிரகாசிக்கப்பட்ட தேவனுடைய ஊழியக்காரர்களாகவும் இருக்க நாடுவோமாக.

## புகழ் எதுவோ

நாம் நம்முடைய குறிப்புகளை போதகர் ஜாலியின் எழுத்துக்களிலிருந்து ஒரு மேற்கோளுடன் தொடங்குகி றோம்; "நாங்கள் முதலில் தயங்கினோம். ஆனாலும் உன்னுடைய சொந்த பெலத்தில் போகாதே அது நிச்சயமாக உனக்குத் தோல்வியைக் கொடுக்கும்; மாறாக கர்த்தருடைய பெலத்தில் போ – அவர் உன்னைக் கைவிடமாட்டார் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது. மிகப்பெரிய சோதனைகளை நீங்கள் பெறுவீர்கள். ஆனாலும் உங்களைத் தாழ்மையோடு

காத்துக்கொண்டு, கர்த்தருக்காகவும், அவருடைய காரியத் திற்காகவும் அன்பான வைராக்கியத்தினால் நிரப்பப் பட்டிருந்தால் சகலமும் நன்மையாகவே இருக்கும். ஜனங்கள் உன்னுடைய நல்ல செய்திக்காக உன்னை புகழுவார்கள், ஆனாலும் வாத்தின் மேலுள்ள தண்ணீரைப் போன்று அவர்களுடைய புகழ்ச்சிகளையும் உண்ணைவிட்டு உதறிவிடு. அவைகளில் அமிழ்ந்து விடாதே. ஏதாவது புகழை உனக்கு ஏற்றுக் கொள்ளும்படி நீ கவர்ந்திழுக்கப்பட்டு சோதிக்கப்படும்போது பாபிலோனிய முட்டாள்தனத்திலிருந்து தேவன் உன்னை விடுவித்து, புதுப்பாட்டை உன் வாயிலே கொடுக்கும் முன்பு நீ அதை வழக்கமாக விசுவாசித்து பிரசங்கித்து வந்ததை நினைத்துக்கொள். (சங். 40:1-3). நாம் எல்லா புகழையும் நியாயப்படி அதற்கு உரிமையுடையவரான தேவனுக்கே செலுத்த வேண்டும்."




"நான் பணிந்த ஆவியையும், நொறுங்கின இருதயத்தையும் உடையவனை உயிர்ப்பிக்கிறேன்." - ஏசா. 57:15.

"**புண்ணியம் எதுவோ புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.**" நாம் நம்மை புகழுவதைக் குறித்து எண்ணவோ அல்லது புகழை அடைய கடுமையாக முயற்சிக்கவோ கூடாது. இருப்பினும் நாம் புகழ்ச்சிக்குப் பாத்திரவான்களாயிருக்க விருப்பத்துடன் முயற்சிக்க வேண்டும். தேவனைப் புகழ்வதைப் பற்றியே நாம் சிந்திக்கவேண்டும். எந்த காரியமானாலும் ஏதாவது மதிப்பும், ஏதாவது புண்ணியமும் எதுவும் புகழ்ச்சிக்குப் பாத்திர மானதையும் பெற்றிருக்கிறதா என்ற உண்மையைக் கண்டறிய வேண்டும். அவைகளில் நம்மைச் சுற்றி யுள்ளவைகளையும் குறிப்பாக தேவனுடைய ஜனங்களில் உள்ள புகழ்ச்சிக்குப் பாத்திரமான குணாம்சங்களையும் கவனித்துப்பார்க்க வேண்டும். சாந்தகுணம், உண்மை யுடைமை, பொறுமையை நாம் குறைவாக மதிப்பிடக்கூடாது. இருந்தபோதிலும் உறுதி (மாறாத்தன்மை), சுறுசுறுப்பு, கடமையில் முழு ஈடுபாடு ஆகியவற்றையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். நாம் மற்றவர்களின் அற்பமான தோல்விகளையும் அல்லது அவர்களின் மிகப்பெரிய தோல்விகளையும்கூட சிந்திக்கக் கூடாது. நமது மனங்களில் தொடர்ந்து சந்தோஷமற்ற சிந்தனைகளை நாம் நிரப்பினால், நமக்கு நாமே தீங்கு செய்கிறவர் களாயிருப்போம்.

நமது சொந்த ஜீவியத்திலும் நம்மைச் சுற்றிலும் இருப்பவர்களின் ஜீவியத்திலுமுள்ள புகழ்ச்சிக்குரிய காரியங்களை நாம் தொடர்ந்து அங்கீகரித்து வரும்போது நாம் அதிகமதிகமாக தேவசாயலை அடைகிறவர்களாவோம்.




புண்ணியம் அல்லது மதிப்புள்ள காரியங்களையும் எந்த அளவிலாவது புகழத்தக்கக் காரியங்களையும் - ஒருவருடைய சிறந்த வார்த்தைகளை அல்லது சிறந்த செயல்களை அல்லது சிறந்த கருத்துக்களை நாம் தீங்கின்றி தியானிக்கலாம். அதன் பலனாக நமது புது மனமும், இருதயமும், சிந்தையும் இவ்வாறு போஷிக்கப்படும் அந்த மாதிரியில் வளர்வதைக் காண்கிறோம். நமது மனம் புதிதாகிறதினால் அதிகமதிகமாக நாம் மறுரூபமாக்கப் படுவோம். இந்த ஜீவியத்தில் அணுவணுவாக, படிப்படியாக, கொஞ்சம் கொஞ்சமாக நாம் மகிமையின்மேல் மகிமை யடைந்து நமது கர்த்தரும், எஜமானருமானவரின் மகிமை பொருந்திய மாதிரியைக் கிட்டிச் சேருவோம். நமது எண்ணங்கள் இவ்வித நிலைமையிலிருந்து, கர்த்தருடன் நமக்குள்ள ஐக்கியத்தை நாம் காத்துக் கொண்டால், மகிமையான ராஜ்யத்தில் பங்கு பெறுவோம். அதோடுகூட கர்த்தருடைய சாயலிலும் மாதிரியிலும் நாம் என்றென்றும் பூரணராக்கப்படுவோம்.

## இவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்

மனிதனுக்கு மட்டுமே காரியங்களை சிந்திக்கும் வல்லமை கொடுக்கப்பட்டிருக்கிறது. " **உன் கால் நடையைச் சீர்தூக்கிப் பார்: உன் வழிகளெல்லாம் நிலைவரப்பட்டிருப்பதாக.**" (நீதி. 4:26). "**அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவன் இருக்கிறான்**" (நீதி 23:7) என்ற பிரகாரம் கல்வி கற்றறிந்தவர்கள் மற்றும் அறிவியலாளர்களிலும் கூட சிலர் மாத்திரமே மனதின் மாபெரும் வல்லமையையும் மற்றும் நம்முடைய ஜீவியத்தின் சகல காரியங்கள் மீது அதின் ஆற்றல்மிக்க செல்வாக்கையும் மதித்துணர்வதாகத் தெரிகிறது. வேதாகமத்தின் மதம் மட்டுமே சகல இழிநிலை யானவைகள் மற்றும் உன்னதமான கொள்கைகள் கோருகிற எல்லாவற்றிற்கும் மேலாக அதன் தரத்தை மிகவும் உயர்த்துகிற ஒரே மதமாயிருக்கிறது. "**உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக்கொள்ளும்.**" (சங். 119:148).

கிறிஸ்தவனுடைய 'நினைவின் வழக்கமானது' அவனுடைய ஆவிக்குரிய நிலைமையைக் காட்டுகிற அளவுகுறியாக (அளவுகாட்டியாக) இருப்பதால் அது அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சி அல்லது வீழ்ச்சியுடன் அதிக சம்பந்தமுள்ளதாயிருக்கிறது. நல்ல நினைவுகளின் வழக்கம் கவனத்துடன் விருத்தி செய்யப்பட வேண்டும்.

“நினைவின் வழக்கம்” என்பது மனமானது ஓய்ந்திருக்கும் வேளைகளில் வழக்கத்தின்படி (தனிப்பட்ட குணம்) திரும்ப வந்து சேருகின்ற வழக்கமான மனநிலை என்று பொருள் படும். ஜீவியத்தின் கடமைகளில் நாம் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கும்பொழுது நமது மனதின் ஆற்றல்களை நாம் செய்யும் வேலையில் ஈடுபடுத்தும் அவசியம் ஏற்படுகிறது. ஏனெனில் நாம் கவனம் செலுத்தாமல் எந்திரத்தைப்போல ஒரு காரியத்தைச் செய்தால் நாம் அதை நன்றாகச் செய்ய முடியாது. என்றாலும் இங்கேயும் குணத்தில் உறுதி படுத்தப்பட்டிருக்கிற கிறிஸ்தவ கோட்பாடு நாம் அறியாமலே வழிநடத்தும். ஆனால் வேலையினாலும் அதன் கவனத்தி னாலும் உண்டான கஷ்டம் சிறிது நேரம் நீங்கும்போது காந்தமுள் துருவத்தை நோக்கி வருவது போல், உறுதிப் படுத்தப்பட்ட நினைவின் வழக்கம் உடனே தேவனண்டையில் இளைப்பாறத் திரும்ப வேண்டும். “**என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மை செய்தபடியால், நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு.**” (சங். 116:7). மனதை ஒருபோதும் உலகக் காரியங்களின் அடிமைத்தனத்திற்கும், களியாட்டுக்கும், தற்காலிகமாகக்கூட விட்டுவிடாமல், கற்புள்ளவைகளெவை களோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ள வைகளெவைகளோ அவைகளை ஆழ்ந்து சிந்திக்கும் ஈடுபாடுகளில் அதனுடைய இளைப்பாறுதல் மற்றும் ஒய்வுக்குத் திரும்பும்படிச் செய்வோமாக.

பொதுவான மனுக்குலம் மிகவும் சொற்பமாகவே சிந்திக்கிறது. மேலும், அவ்வாறு செய்யும்போது ஏறக்குறைய தகுதியற்ற வகைகளில் சிந்தித்து பொய்யான ஆதாரங்கள் அல்லது சர்ச்சைக்குரியவைகள் மேல் கட்டுமானம் செய்கிறது. இருப்பினும் மனுக்குல நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் சிந்திப்பதில் ஒரு வல்லமை உண்டு என்பதையும் வேறெந்த வல்லமைக்கும் அது இரண்டாவதாக குறைந்தது இல்லை என்பதையும் ஒத்துக்கொள்கிறார்கள். சிலர் தங்களுடைய மகிழ்ச்சியும், நல்வாழ்வும் எவ்வளவாக நேர்மையாகச் சிந்திப்பதைச் சார்ந்திருக்கிறது என உணர்கிறார்கள். எல்லா சமுதாயங் களும், தேசங்களும் அவர்களது சந்தோஷத்திற்கும், துக்கத்திற்கும், வாழ்க்கையின் முக்கியமான பிரச்சனை களின்மீது எந்த அளவுக்கு அவர்கள் நேர்மையாக அல்லது தவறாக சிந்திப்பதே காரணமாயிருக்கிறது என்பதை உணர்கிறார்கள். வார்த்தைகள் உலகத்தில் வல்லமை யுள்ளவைகளாக இருக்கின்றன என்றாலும் அவைகள் சிந்தனைகளை எழுப்பி செயலுக்கு வழிநடத்தும் அளவுக்குத் தக்கதாகவே இருக்கிறது.

> *ஜீவியத்தில் மிகவும் முக்கியமானவர், தேவன்*
> *ஆடையில் மிகவும் அழகானது, புன்னகை*
> *மாபெரும் சொத்து, விசுவாசம்*
> *மிகவும் வல்லமையான ஆற்றல், அன்பு*

தேவனும் கூட அவருடைய வார்த்தையின் மூலமாக மனதின் வல்லமையைத் தூண்டி, அவருடைய ஜனங்களும் தங்களது மனங்கள் புதிதாகிறதின் மூலம் மறுரூபமடையும்படி அவர்களை உற்சாகப்படுத்துகிறார். உண்மையில், சிந்திக்கும் ஆற்றலை சீர்படுத்துவது தேவனுடைய ஜனங்களிடத்தில் தொடங்கியது என்றும் சொல்லலாம். மேலும் மதரீதியான காரியங்கள் சம்பந்தப் பட்டவைகள், குறிப்பிடத்தக்க அளவுகளில்கூட அவர் களிடமிருந்து நீங்கவில்லை. புறஜாதி மதங்கள் புரிந்து கொள்ளும் ஆற்றலை தடுத்துநிறுத்தி முக்கியமாக தீவிர உணர்ச்சிகள், முன்கூட்டியே தவறான எண்ணம் கொள்வது மற்றும் பயங்கள் ஆகியவற்றைத் தூண்டுகின்றன. மாறாக ‘வழக்காடுவோம் வாருங்கள்’ (பகுத்தறிவோம் வாருங்கள்) (ஏசா. 1:18) என்று தேவன் கூறுகிறார். ஆதாரமாக முழுமையான அறிவு இல்லாமல் நமது பகுத்தறிவின் திறமைகளை உபயோகித்து சிந்திப்பதானது மிகவும் ஆபத்தான காரியமாக இருக்கலாம். ஆனால் தேவன் இது சம்பந்தமாக அவருடைய விசுவாசிகளாகிய நமக்கு நம்முடைய சிருஷ்டிகர் மற்றும் நமது உடன் சிருஷ்டிகள் சம்பந்தமான நமது கடமை பற்றிய எல்லா காரியங்களையும் பகுத்தறிவதற்கு ஏற்ற ஆதாரமாக தம்முடைய வார்த்தையைக் கொடுத்துப் பாதுகாக்கிறார். வேதவாக்கியங்கள் நிச்சயமான தெளிவான வரையறைகளை முன்வைத்து, தேவனுடைய ஜனங்களை வெளிப்படுத்தப்பட்ட இந்த வரையறைக்குள் பகுத்தறிய அழைக்கிறது. மேலும் பகுத்தறிவதின் மூலம் அவர்கள் தேவன் கிருபையுள்ள வராயிருக்கிறார் என்பதை ருசித்துப்பார்த்து, அவரைப் பற்றிய அதிக தெளிவான அறிவையும், அவரது திட்டத்தையும், குணாம்சத்தையும் பற்றிய சிறப்பான புரிந்துகொள்ளுதலையும் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

தன்னிச்சையாக சிந்திப்பதற்கு எழுப்புதலடைந்த அநேகர் தெய்வீக வெளிப்படுத்தலின் வரையறைகளைக் குறித்துக் கவனமற்றவர்களாக இருக்கிறார்கள். இதன் விளைவாக தெய்வீக வார்த்தையின் செல்வாக்கு அவர்கள் மீது தெய்வீக கட்டுப்பாடற்ற மனதின் சுதந்திரமாகவும், அறிவடைந்த நிலையாகவும் இருப்பதால் மிக தீவிரமாக தன்னிச்சை, தன்னலம், தற்பெருமை, விசுவாச துரோகம் ஆகியவற்றின் உச்சக்கட்டத்திற்கு செல்லும் தன்மையுடைய தாயிருக்கிறது. வேதாகமம் சென்ற இடமெங்கும் அது வெளிச்சமாக இருந்து, நாகரீக சமூக மேம்பாட்டிற்கு வழிநடத்தியது. அதனுடைய ஒளியூட்டலின் செல்வாக்கின் மூலம் லட்சக்கணக்கானோர் பயனடைந்தனர். இருப்பினும் குறிப்பிடத்தக்க சிலர் மாத்திரமே அதனுடைய வெளிச்சத் திற்கு அருகாமையிலும், அதனுடைய வரையறுக்கப்பட்ட பகுத்தறிவு மற்றும் வழிகாட்டுதலின் எல்லைகளுக்குள்ளும் நடந்தார்கள். இப்படிப்பட்ட சிலரே உண்மையான கிறிஸ்தவர்கள்.

தேவனையும் கிறிஸ்துவையும், கடந்தகால பாத் திரரான பரிசுத்தவான்களையும் மற்றும் வரப்போகும் உலகளாவிய ராஜ்யத்தில் ஆசீர்வாதமான நம்முடைய எதிர்கால வேலைகளையும், தெய்வீக திட்டத்தின் முக்கியத்துவத்தையும், தயவையும் பற்றிய சிந்தனைகள் நம்முடைய மனங்களை நிரப்பி, நம்முடைய இருதயங்

களுக்கு தெய்வீக ஊக்கமளிப்பதாக. மேலும் இப்படிப்பட்ட ஆழ்ந்த சிந்தனைகளுடன் தேவனை துதித்து ஆராதிக்க நாம் சபையாகக்கூடி வருவதினாலும், வசனத்தைப் படிப்பதினாலும் ஜெபத்தினாலும் தேவனுடன் தனிப்பட்ட ஐக்கியம் மற்றும் உறவின் ஆசீர்வாதத்தையும் கூடுதலாகப் பெற்றுக் கொள்வோமாக. தேவனுடைய தெய்வீக திட்டம் மற்றும் அவருடைய சித்தத்தினால் மனது நிரப்பப்படுவதின் மூலம் மறுரூபமாக்கும் செல்வாக்கு உங்கள் மனதின் ஒவ்வொரு பகுதிகளுக்குள்ளும் நீண்டு செல்லட்டும். ஆம் "**உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.**" (ரோம. 12:2).

## வெற்றி பெறுகிறவர்களுக்கே வெகுமதிகள்

உண்மையற்ற, அபாத்திரமான, அநீதியான, கற்பற்ற மற்றும் விரும்பத்தகாத சிந்தனைகளாக தங்களைக் காட்டுகிற அனைத்தையும் கொழித்து, பரீட்சித்து, விலக்கி விட்டால், தங்களது மனங்கள் வேலை செய்வதற்கு எந்த கருப்பொருளும் (விஷயமும்) மிச்சம் இல்லாமல் போய்விடும் என சிலர் நினைக்கலாம். பெரும்பாலானவர்களைப் பொருத்தமட்டில் இது உண்மையாகவே இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அனைத்துவித தீமையான, தகுதி யற்ற சிந்தனைகள் மனதிலிருந்து தள்ளப்பட்டு நீக்கப் பட்டிருந்தால், ஒரு குறிப்பிட்ட காலம் அவர்களுடைய மனங்கள் சிந்தனைகளின்றி முற்றிலும் காலியாக இருக்கும். ஆனால், அந்த நேரத்தில் இவ்விதமான மனநிலையுடன் கற்புள்ளவைகள், அன்புள்ளவைகள் மற்றும் ஒழுக்கமுள்ளவைகளுக்காக "**நீதியின்மேல் பசிதாக முள்ளவர்களாக**" கர்த்தர் அவர்களுக்கு கொடுக்கும் மெய்யான ஆவிக்குரிய ஆகாரத்தைப் (போஜனத்தை) பெற்றுக் கொள்ளத் தகுதியான நிலையில் இருப்பார்கள். அங்கு ஒரு காரியம், ஒரே ஒரு காரியம் மட்டுமே இருக்கிறது. அது உண்மையுள்ளதாகவும், ஒழுக்கமுள்ளதாகவும், நீதியுள்ளதாகவும், கற்புள்ளதாகவும், அன்புள்ளதாகவும் இருப்பதாக தன்னை மெய்ப்பித்துக்காட்டி மேற்சொன்ன




"வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்." - ஏசா. 1:18.

அனைத்து கருத்துக்களும் முற்றிலும் இணைந்து உருவானதாகவும் இருக்கிறது. அதுவே தெய்வீக குணாம்சமும், திட்டமுமாகும். அதனுடைய பல்வேறு சிறப்பம்சங்களையும் நாம் சிந்திப்போமாக. தெய்வீக வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தெய்வீக திட்டத்தின் சிறப்பையும், தெய்வீக குணாம்சத்தின் அழகையும் ஒரு தொலை நோக்கியால் பார்ப்பது போல தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து படித்து அதின் வழியாய்க் காண்போமாக. எந்த மனிதனாலும் அளவிட முடியாத அதனுடைய நீளம்,அகலம், உயரம், ஆழத்தை, பரிசுத்த வான்கள் மட்டுமே பரிசுத்த ஆவியினால் இயல்பான மனிதனுடைய பரிசுத்தமற்ற சிந்தனைகளையும் மன உணர்வுகளையும் நீக்கிவிட்டு அவைகளுக்குப் பதிலாக அவர்கள் பெற்றிருக்கும் பரிசுத்த ஆவி, பரிசுத்த (மனம்) சிந்தை, பரிசுத்த சிந்தனைகளின் அளவுக்குத்தக்கதாக அறிந்துகொள்ள முடியும். வெளி 18:4-ல் கூறப்பட்டுள்ள -'என் ஜனங்களாகிய' - யேகோவாவின் பார்வையில் சகோதரர்களாக இருப்பவர்கள் எல்லாருக்கும் உயர்ந்த மதிப்பாக எத்தனை அற்புதமான ஒரு வெகுமதியை கர்த்தர் அவருடைய வசனத்தை ஆராய்ந்து படிப்பதில் வைத்திருக்கிறார். ***

## LHMM General Convention at Nazareth - 2017 (Oct 13,14,15)

**இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொள்ளும்படியாக சத்திய சகோதர, சகோதரிகள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம். சங். 133.**

Visit us at : www.biblestandardindia.com

For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:
Bro. V. Vincent Jeyakumar
Laymen's Home Missionary Movement
#11/119-3, Near Water tank, South Street, Mukuperi - 628 616
(Near Nazareth), Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY